திராவிடம்

விடுதலை வீரர்

பர்க்யூபா

[அரங்கண்ணல்]

சோறில்லையே எனும் கவலை, துடிக்கிறார்களே மனைவி மக்கள் என்கிற சோகம், ஆதிக்கக்காரர்களின் தர்பார், அத்தனையையும் தூசெனமதிக்கும் துணிவையும் உத்வேகத்தையும் எவ்வளவு சீக்கிரம், உண்டாக்கி விடுகிறது, அந்தச்சொல்! கூனனும் நிமிர்கிறான்—குருடனும் பெறுகிறான் புத்தொளி—மீன்விழியாளும் வேங்கையாகிறாள்—தடியடி, குண்டுமாரி, பிணமலை, எனினும், அடக்கமுடிகிறதா, சுதந்திரம் எனும் சுந்தரமான அந்தச் சொல்லை: எரிமலையைக் கிளறக் கிளற எவவண்ணம் அனலும், அக்கினிக்குழம்பும் வீறிட்டு வெளியில் வருமோ, அதுபோலவன்றோ, அடக்குமுறையைக் காணக்காண, வழிகிறது ஆர்வம். அரும்புப் பருவத்தான்,குறும்புநடையாள்ஏடு படிக்கும் மாணக்கன், ஏரோட்டும் ஏழை, கூழ்குடிப்போன், குதிரை வண்டி ஓட்டுவோன், களமடிப்போன், நாற்று நடுபவன்,—இப்படி வாழ்க்கையின் பலவகையான படிக்கட்டுகளில் நிற்போரையெல்லாம், ஒன்று திரட்டி, 'அச்சமில்லை அச்சமில்லை', என்று வீரப்பண்பாடச் செய்கிறது. வெந்தணல்—வெள்ளக்காடு—துப்பாக்கிசுடும்—பிணமாக்கும், என்று தெரியாமலில்லை, எவருக்கும். ஆயினும் என்ன, அதனால் உயிர்தானேபோகும், போகட்டுமே—அஞ்சேல், அயரேல், அடைந்தேதிருவோம் நமது நாட்டை என்றறன்றோ, கூறச்செய்கிறது.

என்னகாரணம் இதற்கு? என்ன இருக்கிறது அச்சொல்லில்?—ஆதிக்கம் செலுத்துவோர், உணரமறுப்பதாலேயே, இருபதாம் நூற்றாண்டான இக்காலத்திலும், உலகின் நாலாபாகங்களிலும் கிளர்ச்சிகளையும், சுதந்திரப் போராட்டங்களைப் பற்றிய செய்திகளையும் கேள்விப்படுகிறோம். படைபாய்ந்தது, சிறை திறந்தது, பாலைவனம் நோக்கிவிரட்டப்பட்டனர், தூக்குமேடை அழைத்தது,—என்றுதான், பல்லவி இருக்கிறது; ஆனால், பல்லவி அனுபல்லவியாகி அனுபல்லவி, சரணமாக மாறும் போதுசங்கநாதம்செய்வோராகயிருப்போர்சர்க்காரை நடாத்தியோரல்ல, சர்க்காரால் தண்டிக்கப்பட்டோர்களாகத்தான் இருக்கிறார்கள்,—விடுதலை நூலின், தொடர்கதைத், இந்தச்சம்பவம். எந்தநாடானாலும், இவ்வளவுபெரிய இந்தியாவேயானாலும், டச்சுக்காரர்கள் பிடியில் கிடந்த சின்னஞ்சிறு இந்தோனேஷியாவாக ஆனாலும், பிரெஞ்சுக்காரரின் 'கித்தாப்பு, இடமாக இருந்த புதுவை காரைக்காலானாலும், கடைசி அத்தியாயத்தை எழுதுவோராக இருக்கிறவர்கள், அந்த நாட்டு விடுதலை வீரர்களாகத்தானிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட விடுதலை வீரர்கள், செத்தும் சாகாதவர்கள்! அவர்தம் கல்லறைக்கு என்றும் மாலை சூட்டத் தயங்கார், மக்கள். மாவீரா—உத்தமா—எம் தலைவா, என்று உணர்ச்சியோடு, என்றும் கொண்டாடும், எதிர்காலம். அத்தகைய உயரிய புகழ் கிடைக்காதா எனும் உணர்ச்சியால்தான், விடுதலைப்படை, ஒவ்வொரு இடத்திலும் உருவாகிறது. வாழ்க, அந்த உயரிய புகழ்.

*

பர்க்யூபா—பலருக்கு, புரியாத பெயராயிருக்கக்கூடும்.

ஆனால், ஒரு நாட்டின் விடுதலை நூலின் கடைசி அத்தியாயத்தை எழுதிய தீரர், அவர்.

பல்லாண்டு காலமாக பிரெஞ்சுக்காரர்களின் பிடியிலே கிடந்துழன்ற டுனிஷியாவுக்குச் சென்ற சில வாரங்களுக்கு முன்பு, சுதந்திரம்பெற்றுத் தந்திருக்கும் பெரியார்.

சுதந்திரம்!—எனும் சொல்லைத் தாரக மந்திரமாகக்கொண்டு, பள்ளிக்குச் சென்ற காலமுதல் பாடுபட்டு, இப்போது பயனும் பெற்றிருக்கிறார்.

தாயகத்தை விடுவிக்கவேண்டுமெனும் வீரம் காரணமாக, பற்பல செயல்களிலே ஈடுபட்டுப்பலியாகிப் போவோர் ஏராளம். அப்படிப்பட்ட 'சுபாஷ்போஸ்'களை, நினைக்கும போது மிகமிக வேதனைப்படும், நெஞ்சம். ஆனால் பார்க்யூபா, சுபாஷைப்போல வீரதீரச் செயல்களில் இறங்கியவர் மட்டுமல்ல, தன் வாழ்நாளிலேயே, தன்னகத்தைச் சுதந்திர நாடாகக் காணும், 'பாக்கியமும்' பெற்றவர்

சீமானோ? — அல்ல, அவர். ஏழைதான்.

இருக்கவும் இடமில்லாமல் திண்டாடியிருக்கின்றனர், அவரும், அவர் ஆசை மனைவியாரும்.

எப்போதுமே, ஏழையோ,

அல்ல, அல்ல,விடுதலை இயக்கத்திலே இறங்குமுன், பர்க்யூபா, பிரசித்திபெற்றவக்கீல்அவருக்கெனச் சிறு மாளிகை உண்டு; சிங்காரமான கார் ஒன்றும் உண்டு.

இயக்கத்தில் சேர்ந்ததால், ஏழையானவர்.

சிறையில் போட்டது, பிரெஞ்சு ஆதிக்கம் — குடும்பத்தைக் காப்பாற்ற, வீடும் காரும் விலையாயிற்று.

சிறையிலிருந்து மீண்டதும்—"செச்சே, நமக்கேனிந்த வாழ்வு? நன்கு படித்திருக்கிறோம், பிரெஞ்சு மொழியை. பாரிசிலே பாஸ் செய்து பட்டம் பெற்றோம் சட்டத் துறையில், மனைவியோ, ஒரு பிரெஞ்சு மாது. விழியைக் கொஞ்சம் அசைத்தாலே, அருமையான வேலை கிடைக்கும் — நாற்காலியை விட்டு இறங்காமல், நகத்தில் அழுக்குப்படாமல் வாழ்ந்துவிட்டுப் போகலாம். அதைவிட்டுக் காடும், மேடும், அடியும் உதையும் பட்டுக்கொண்டு ஏன் அவதிப்பட வேண்டும்?"—என்று போய்விடவில்லை. சிறைக்கதவு திறந்ததா—வெளியில் வந்தேதன்-கிளர்ச்சி, சிறை, மீண்டும் மூடுகிறது-பிறகு திறக்கிறது—மூடுகிறது, திறக்கிறது — இப்படியே, அவதிப்பட்டிருக்கிறார். அப்படி அவதிப்படுவதே, தாயகம் விடுதலையாவதற்கான வழி என்று உணர்ந்ததால் ஒவ்வொரு முறையும் ஆனந்தத்துடன், அரசாங்கம் வழங்கிய அடக்குமுறைகளை அனுபவித்திருக்கிறார். ஒருமுறை, நாட்டைவிட்டே விரட்டிற்றும், பிரஞ்சு சர்க்கார், பாலைவனத்திலும், பக்கத்து நாடுகளிலும் அலைந்திருக்கிறார். அப்போதும், "டுனிஷியாவுக்கு விடுதலை வாங்கித்

(4–ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 9-10-55 [இதழ் 14

கள்ளத்தோணியேறி!

கலம் ஏறிச்சென்று வாகை சூடிய வீரப் பரம்பரையினர், நீங்கள்!—என்று, காஞ்சி மாநகரில் பேசிய நேருபண்டிதர், வெளியிட்டார். அழிந்தொழிந்த நமது பெருமையை, அவர் அறியாதவரல்ல; தெரிந்திருக்கிறார், மிகவும் தெளிவுடன். தமிழினம், கால வெள்ளத்தால், கசடர் தம் காலடியில் கிடக்கும் கதி பெற்றதே ஒழிய, அன்றோர் நாள் அணிதேர்ப்புரவி பெரும்படையுடன் வீர உலாவந்த வெற்றிபுரி, என்பதை அவர் அறியும்படி செய்திருக்கிறது—தமிழகத்தின் இடங்கள்! தஞ்சைக் கோயிலும், வேலூர்க் கோட்டையும், திருவண்ணாமலை கோபுரமும், காஞ்சிக் கோயில்களும், திருச்சிமலைக் கோட்டையும்-அதன்மீது இருக்கும் குகைக் கோயிலும், அருகே தாளம் எழுப்பிய வண்ணம் சலசலவென ஓடிக்கொண்டிருக்கும் பொன்னி நதியும், அவருக்கு தமிழகத்தின் பழம் பெருமையையும் வளத்தையும்பற்றி நினைக்கச் செய்திருக்கும்! அவரென்ன, வெளியிடத்திலிருந்துவரும் யாரும், 'வெப்பத்தால் தகிப்பதில்லை, திராவிடம் தண்ணொளி, நாடு! வந்தாரை, வரவேற்கும், இன்முகம் இங்கன்றி எங்குண்டு?, என்று வருணிக்காமல் போவதில்லை. சென்ற தடவை, நேரு பண்டிதர் வந்தபோது, இந்தக் காட்சிகளைக் காணாததால் ஏசினார் போலும்! ஆனால், இம்முறை '' காட்டுமிராண்டிகளாகஇருப்போர், எமது வடநாட்டவரே. வடநாட்டிலும்,எமது மாகாணத்தவரே. அங்கும், எமது ஊர்க்காரரே,'' என்று குறைபட்டுக்கொண்டு கோட்டையில் வெளியிட்டும்—பவனி முடியும் கடைசிக் கூட்டமாதலால், காஞ்சியில் நமது பழைய வீரத்தை விளக்கியும் புகழ்ந்துள்ளார். இகழ்ந்தவாய் புகழ்கிறது—இது, நமது தமிழன்னையின் இயற்கை எழிலுக்குக் கிடைத்த வெற்றி எனக்கொள்வோம்.

கலம் ஓட்டிச்சென்றனராம், பல்லவர்—பல்லவர்மட்டுமா? சோழன் சென்றிருக்கிறான்! பாண்டியன், கடலையே, மாதாவாகக் கருதியிருந்திருக்கிறான்—முத்து வழங்க! சேரநாட்டுக்கும் சிங்களத்துக்கும் இருந்த தொடர்பு மிக அதிகம்! இன்றைய சிங்கப்பூர், ஒரு காலத்திலே சிங்கபுரியாக இருந்ததாம்—ஜாவா, சுமத்ராக்களில் தமிழ் மன்னர் தம் சின்னங்கள் உண்டு, பர்மாவைக் கடாரம் எனக்குறிக்கிறது, தமிழ் ஏடு. கடாரங்கொண்டான் என்பது சோழனுக்குப் பெயர்! கங்கை கொண்டவனுண்டு, விமானமும் விரைந்தோடும் இரயிலும் இல்லாத காலத்திலேயே இமயகிரிவரை சென்று கொடி பொறித்திருக்கின்றனர், நம்மவர்கள். ரோமாபுரி, கிரேக்கம், யார் வரவில்லை நம்மைத்தேடி?—அது ஒரு காலம்! அந்தக் காலத்தை அன்பர் நேரு, நினைவூட்டிவிட்டார், காஞ்சியில். இந்தப்பெருமைகளை நம் போன்றோர் உரைக்கும்போது, நாயனே! பேயனே! நல்லதா இது தீயோனே! என்று, வாயை ஈட்டியாக்கும் இயல்பு கொண்டோர், ஏராளம். அவர் தம், உள்ளத்துக்கு, பண்டிதரின் உரையைப் பரிசாக்குகிறோம். பராக்குக்கூறும் பண்பினரே, பண்டிதர், புகழ்கிறார்—நமது பண்டைய பெருமைகளைப்பற்றி!!

அப்படிப் புகழ்ந்துவிட்டு 'அப்படிப்பட்ட நாம் இப்படிப்பட்ட நிலையில் கிடக்கிறோமே?' என்று சுட்டிக்காட்டுவது, அவருடைய வேலையா? அப்படிச் சொன்னால், திருப்பிக் கேட்பார்களல்லவா மக்கள், ஏனய்யா நாங்கள் இந்த நிலைக்கு வந்தோம்—இழிந்தோரானோமே எப்படி — என்றெல்லாம். அதனால், தேசீயத்தேனைத் தடவி, தித்திக்கும் விதமாக நமது பழம் புகழைப் பாராட்டி, அப்படி வாழ்ந்த நாம் இடைக்காலத்தில் 'கப்பலேறிச் செல்வது சாஸ்திர விரோதம்' என்கிற கருத்துக்கு இரையானதால் கெட்டோம், என்று நொந்துகொண்டு, இப்போது, சர்வசாதாரணமாகி விட்டது வெளிநாடுகளுக்குச் செல்வது என்று சொல்லி; கடைசியில், வழக்கம்போல ஐக்கிய ஆலாபனம் பாடி, ஆகவே இந்திய ஒற்றுமையைக் காக்கவேண்டும் என்று முடித்துவிட்டார்! அவருக்கு எது எப்படியிருந்தாலும், கடைசி வாக்கியம், இந்தியா—இந்தியம் —பாரதவர்ஷம்—இவைகள்தான். ஆகவே, அவைகளோடு முடித்துவிட்டார்!

கலம் ஏறிச்சென்றோரின் பரம்பரை என்று வர்ணித்தாரே, வளமான வார்த்தைகளுடன். அந்தப் பரம்பரை இதோ ஏறிச்செல்லுகிறது, கள்ளத்தோணி! ''கையும் களவுமாய் பிடித்துக்கொண்டிருக்கிறோம்! ஓரளவு வெற்றி கிடைக்கிறது!'' —என்று, இதோ வெளியிடுகிறார், வெளியேறுவோர் தடுப்பு அதிகாரி சேஷன் என்பவர்.

நேரு பேச்சை வெளியிட்ட அதே 'இந்து' சேஷனையும் பேட்டி கண்டு செய்தி வெளியிட்டிருக்கிறது, அதே இதழின் இன்னொரு பக்கத்தில்.

இராமநாதபுரத்திற்கு அருகாமையில் கடலோரமாகவும், அறந்தாங்கி, அரசனகிரி, மீமிசல், வேதாரண்யம் முதலிய இடங்களின் வழியாகவும் கள்ளத்தோணி மூலம், கடலைக் கடந்து, அலையும் சுறாவும் அலைக் கழித்தாலும் அஞ்சாது, எப்படியாவது இலங்கைக்குச் செல்கிறார்களாம்—பண்டிதர் புகழ்ந்தாரே, அதுபோல வெற்றிகொள்ள அல்ல! வயிறு கழுவ!

அப்படி நுழைவோரில், பிணமாவோரும் உண்டு—எஞ்சியோரைப் பிடித்து, திருப்பி அனுப்புகிறது, இலங்கை சர்க்கார்! அங்குபோய்க் குடியேறி வாழ்வோரையே அடித்து விரட்டும் இலங்கை, திருட்டுத்தனமாக நுழையும் இவர்களையா வாழவிடும்.

அப்படி அடித்து விரட்டுகிறது என்று அறிந்தும், இங்கேயிருப்போருக்கு ஆசை விடவில்லை. வாழவேண்டுமே, எப்படியாவது. அந்த ஆசைக்கு முன்னால், புயலும் சுறாவளியும் என்ன செய்யமுடியும்? அதனால், கள்ளத்தோணி யேற்றம், அதிகமாகிறதாம் — அதைத் தடுக்க, சேஷன் நியமிக்கப்பட்டிருக்கிறார். என்றாலும் தொகை அதிகமாகிறதாம்-இதோ இலங்கையின் புள்ளி விவரம்.

1954-ல் இப்படித் திருட்டுத்தனமாக நுழைந்ததால், திருப்பி அனுப்பப்பட்டோர் தொகை 900.

1955-செப்டம்பர் வரையில் அதாவது, 9-மாதத்தில்-இப்படி நுழைந்து திருப்பிக்கொண்டு வந்துவிடப்பட்டோரின் எண்ணிக்கை 1183.

தொகை வளருகிறது! துயரம் குறையவில்லை!!

இப்படிக் கள்ளத்தோணி ஏறிச் செல்வோர், ஒருமுறை திருப்பி அனுப்பப்பட்டால், மீண்டும் மீண்டும் இலங்கை செல்லவே எத்தனிக்கிறார்களாம் — அப்படியென்ன இலங்கையில், தங்கம் கொட்டிக் கிடக்கிறதா, அள்ளிவர! இவர்கள்தான் என்ன வியாபாரக் கோமான்களா, வட்டிக் கடை சேட்டுகளா—உழைக்க இடம் பிடிக்கிறார்கள்!! விரட்ட விரட்ட ஓடுகிறார்கள் — அதுவும், திருட்டுத்தனமாக ஓடுகிறார்கள்!!!

நேரு புகழ்கிறார், கலம் ஓட்டிச் சென்ற பரம்பரையல்லவா — நீங்கள் என்று! அவருக்குப் பொன்னாடை தருகின்றனர் புரோகிதர்கள் — கோயில் யானை கொட்டுகிறது மலர்மாரி — பிரபுக்களும், பீடமேறிய அமைச்சர்களும் வலம் வருகிறார்கள் — ஆனால், எவராவது இந்த இழிநிலையை எடுத்துச் சொன்னார்களா!! எப்படிச் சொல்லுவார்கள், நேருவேதான் சீறினாராமே, நாகையில், ''மக்களிடம் இப்படிக் குறைகள் சொல்லும் குணம்தான் அதிகம் இருக்கிறது'' என்று. காம

ராஜருக்கோ மற்றக் 'கனம்'களுக்கோ, ரோடுகளை அழகாக்கி, அதிலே போலீசார் முன்செல்ல, பின்னே நேரு பண்டிதரின் கார்செல்ல, "பாரும்! பாரும்! உமது வரவுக்காக நாம் செய்த ஏற்பாடுகளைப் பாரும்!" என்று பல்லைக் காட்டுவதுதானே பெரிதாக இருக்கிறது. பதவிகிடைத்தது,பராக்குக் கூறவேஒழிய, நாட்டின் ஏழ்மையை எடுத்துக்காட்டி, நிதி உதவி இல்லாததால் ரோடு இருப்பதைப் பாரீர்—கிராமம் அழிவதைக் காணீர் — பிச்சைக்காரர் கூட்டத்தைப் பாரீர் — என்று யார் கூறுகிறார்கள்? பிச்சைக்காரர்களையே கண்ணில் படவிடக்கூடாது என்பதில் அல்லவா, சிரத்தை எடுக்கிறார்கள்!!

அவர் காஞ்சியைப் புகழ்ந்தார்—தனக்கு வரவேற்பளித்த மக்களின் பெருந்தன்மையை வாழ்த்தினார்—நன்றி தெரிவித்துக்கொண்டார் — பறந்துவிட்டார்! ஆனால், இதோ, கோடிக்கரையிலும், மீமிசலிலும், அறந்தாங்கியிலும், தொண்டியிலும், கள்ளத் தோணி ஏறிச் செல்லுவதற்காக இருட்டு நேரம் பார்த்துக்கொண்டு ஏங்கி நிற்கிறார்களே, இவர்களுக்கு இங்கேயே ஒரு வேலை கொடுத்து, உழைக்கச் செய்வதுயார்! கருவேலமரம் போன்ற உடல்-காளைப் பருவம்—உருண்டு திரண்ட காலும், கையும்—'வீரமரபினன்—ஆனால், வடிக்கிறானே, கண்ணீர்!! அதைத் துடைப்பது, யார்? — அதையே, சிந்திக்க வேண்டுகிறோம், தோழர்களே. கலம் ஏறிச்சென்றது ஓர் காலம்! கள்ளத் தோணி தேடுவது இந்தக்காலம்! —என்றாலும் பாதம் பணிகிறோம்; பராக்குக் கூறுகிறோம், என்ற முறையில் நடந்துகொள்கிறது சர்க்கார்!

★

2-பக்கத் தொடர்ச்சி

தருவேன்" என்கிற சுதந்திர தாகம் சுடர்விட்டதேயொழிய, எனக்கேனிந்தக் கஷ்ட நஷ்டம். எல்லோரையும்போல எனக்கும் பெண்டு பிள்ளைகளில்லையா? அரசுக்கு எடுபிடியாக நானும் ஆகக்கூடாதா."—என்று எண்ணவில்லை. சுதந்திரம் என்கிற சொல்மீது உண்மையாகப் பற்றுக்கொண்டவர்கள்தான், மெய்வருத்தம் பாரார், கண்துஞ்சார், செவ்வி அருமையும், பாரார், அவர்களுக்குத்தான், தாய்நாடு எனும் 'பித்து'ப் பிடித்து விடுகிறது. வெறியர்களாகவன்றோ, ஆகிவிடுகின்றனர்.

"தலைவா,"

"தோழனே,"

"பாரிசில் தாங்கள் படித்த 18-ம் வயது முதல், டுனூஷியா விடுதலை அடையவேண்டுமெனப் பாடுபட்டு வருகின்றீர்கள். இதனால் தொழிலையும் துறந்தீர், மனைவியையும் இழந்தீர், ஒரே மகன், படிக்கவும் வசதியின்றி வதைகிறான்—இருக்கவோ, ஒரு வீடில்லை உங்களுக்கு அதனால்..."

"அதனால்..."

உங்களால் எழுச்சி யூட்டப்பட்ட நாங்கள், நீங்கள் உண்டாக்கிய (Neo-Destour) 'நியோ டெஸ்டார்' கட்சியைச் சார்ந்த நாங்கள் நிதியொன்று திரட்டியுள்ளோம்."

"எதற்கு, நிதி?"

"எமது தலைவனும் பிற நாட்டுத் தலைவர்களைப்போல சுகமான மாளிகையிலிருக்க வேண்டும் எனும் ஆவலால். யாராவது ஒருமுக்கியஸ்தர் உங்களைக்காண வந்தால், உட்காரச் சொல்லக்கூட ஒரு நாற்காலி இல்லை, உங்களிடம். வருக, என் வீட்டுக்கு,—என்று அழைக்கவும், ஒரு குடில் இல்லை, உங்களுக்கு. இது கேவலமில்லையா, தலைவா? உங்களுக்குக் கேவலமாகப்படாமலிருக்கக்கூடும். ஆனால், எமது தலைவரை இந்த நிலைமையில் வைத்துப்பார்ப்பது எங்களுக்கல்லவா கேவலமாக இருக்கிறது. அதனாலேயே, எப்படியும் உங்களுக்கு ஒரு மாளிகை வாங்கிக் கொடுத்துவிடுவது என்று முடிவு செய்துவிட்டோம். நீங்கள் மறுத்தாலும், உங்களை விடப்போவதில்லை."

"மிக்க மகிழ்ச்சி, எங்கே அந்தப் பணம்?"

"இதோ!"

பர்க்யூபாவுக்கு, மாளிகை வாங்க விருந்த பணம் கிடைத்ததும் "ஆ பணமே, நீயில்லாமல் நான் என்னென்ன கஷ்டப்பட்டுவிட்டேன். என் கையில் இப்போது நீ சிக்கிவிட்டாய்—இனி உன்னை விடமாட்டேன். வட்டிக்கு விடுவேன், பாங்கில் கட்டுவேன், ஒவ்வொரு நாளும் உட்கார்ந்து கணக்குப்பார்ப்பேன்," என்று மகிழ்ந்துவிடவில்லை, பர்க்யூபா. உண்மையான சுதந்திர இதயம் கொண்டவராயிற்றே, அதனால் அத்தொகை முழுவதையும், 'டெஸ்டார்' கட்சியைப் பரப்ப—அதன் தொண்டர்களுக்குச் செலவிட—ஏடு நடத்த—கூட்டங்கள் போட— இப்படிச் செலவழித்தாராம். பர்க்யூபா, சிறந்த பேச்சாளராம், டுனீஷியாவில். பாரிஸ் மாநகரில் அவர் படித்தகாலையிலே, கற்றுணர்ந்த கல்வியை, மக்கள் மன்றத்தின் உணர்ச்சியைத் தூண்டப்பயன் படுத்தினாராம். அதனால், பத்திரிகை யொன்றும் நடத்தினாராம். அவர், மாணவப் பருவத்தில் ஈடுபட்ட அரசியல் கட்சியின் பெயர் "Old Destour," என்பது. Destour என்றால், அரசியலமைப்பு எனப்பெயர். அந்தக் கட்சியை, ஒப்பிடவேண்டுமென்றால். நமது 'பழைய இடத்தை'த்தான் சொல்லவேண்டும்; ஜஸ்டிஸ் கட்சியைப்போல சீமான்களும், தேச சேவை என்பதை ஒரு பொழுதுபோக்குச் சாதனமாக கருதியோரும்தான் அங்கேயிருந்தனராம். அவர்கள் மத்தியிலே, அற்ப வாழ்வைவிட, உயரிய வாழ்வு பெறும் உணர்ச்சிகொண்ட பேர்அமர் பர்க்யூபாவால் எப்படியிருக்க இயலும். அதனால், விலகினார். விலகியதும், தன் இதயத்தில் கொண்டிருந்த கொள்கைகளையும் விலக்கிக் கொள்ளவில்லை. தீவிரமாகவும் உண்மையாகவே சுதந்திரத்துக்குப் பாடுபடவேண்டுமென்ற ஆவலுடனும் புதிய கட்சி யொன்றை நிறுவினார். அதுதான், Neo Destour, பழைய இடத்து விசுவாசத்தையும் கொள்கையையும் மறந்துவிடக்கூடாது என்பதற்காக "டெஸ்டார்" என்னும் பெயரையே வைத்துக் கொண்டார்—"புதிய" என்னும் அடைமொழியுடன். அப்படி அவர் 1934 ல் புதிய கட்சி உருவாக்கியதுதான் தாமதம், இதுவரை, "பழைய டெஸ்டார் தானே, அதிலிருக்கும் தலைவர் நமக்குத் தெரிந்தவர் தானே! அவரா, நமக்குத் தொல்லை தருவார்? அப்படித் தருவார் போலத் தெரிந்தால், கூப்பிட்டனுப்பி, குலாவினால் மகிழ்ந்து போய்விடுகிறார் — உறவினருக்கு உயர் பதவி அளிக்கிறேன்—உங்களுக்கும் வேண்டியதைச் செய்கிறேன்," என்று சொன்னால் பேசாமலிருந்துவிடுவார்—நமக்காக மக்களிடம் ஆதரவு திரட்டித்தந்தாலும் தருவார்," என்று கருதிக் கொண்டிருந்த பிரெஞ்சு ஆதிக்கம், மிரளலாயிற்று. ஏனெனில் பர்க்யூபா, போலீத் தலைவரல்லவே— உண்மையாகவே சுதந்திர இதயம் கொண்டவராயிற்றே. அவர் 'செத்தும் சாகாத' உயரிய வாழ்வை

(15-ம் பக்கம் பார்க்க)

ஆரியம் இருக்கும் இடம்!

தம்பி,

ஆரியரை நடுத்தெருவில் நாள் முழுதும் போட்டு உதைத்தாலும் கேட்பதற்கு இன்று நாதி கிடையாது!

என்ன அண்ணா! இப்படி ஒரே போடு போடுகிறாயே. இவ்விதமெல்லாம் கூறும் வழக்கமோ—கருதும் சுபாவமோ கிடையாதே, என்ன காரணம் இவ்வளவு மோசமான நடையிலே பேச, என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா, உனக்கு.

பலே! பலே! இது ரோஷமான பேச்சு! இது வீரனின் முழக்கம்! இவ்விதம் பேசினால்தான்பிரச்சினை தீருமே தவிர, மயிலே மயிலே இறகு போடு என்றால் போடுமா, என்றுகேட்டுக் களிப்பால் துள்ளிக் குதிப்போரும் இருக்கிறார்கள்.

தம்பி! நீ கலக்கமடையவும் காரணமில்லை, அவர்கள் களிப்படையவும் தேவையில்லை, ஏனெனில், ஆரியரை நடுத்தெருவில் நாளெல்லாம் போட்டு அடித்தாலும் இன்று கேட்பதற்கு நாதி இல்லை என்ற மணிவாசகம் என்னுடையது அல்ல! 'விடுதலை'யில் வெளிவந்த வீர முழக்கம் அது; 28—9—55ல்!!

அக்ரகாரங்கள் இந்த வீராவேச உரை கண்டதும் இடி கண்ட நாகமாகவேண்டுமென்று எண்ணினாரோ, அல்லது படை வீரர்களுக்குச் சிறிதளவு உணர்ச்சிப் பானம் கிடைக்கட்டும் என்று கருதினாரோ, எதற்காக இவ்விதம் தீட்டினாரோ, நானறியேன்—ஆனால் ஆரிய இனத்தை நடுவீதியில் போட்டு அடித்தாலும் ஏன் என்று கேட்க நாதி இல்லை என்று எழுதியவருடைய 'கைவலி' தீருவதற்கு முன்பே, நாடாளும் காங்கிரஸ் தலைவர்கள், ஆரியரின் முகம் சிறிதளவு சுளித்துவிடுகிறது என்று தெரிந்ததும், நடுநடுங்கிப் போகிறார்கள் எனும் உண்மை, இப்போது தெரிகிறது.

வீரம் தேவை—நிச்சயமாக!

போர் முழக்கம் வேண்டும் அவ்வப்போது உணர்ச்சி மூட்ட!

உள்ள நிலைமைக்குத் துளியும் பொருத்தமோ பொருளோ அற்ற வகையில், ஓங்காரக் கூச்சலிடுவது, கவைக்கு உதவாது, என்பதை எடுத்துக்காட்டும் சம்பவம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

ஆரியர்—சமூகத்திலே அனைவராலும் வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிடப்பட்டது போலவும், கள்ளர், கயவர், கை ஏந்தி நிற்போர், ஆகியோர் எவ்வண்ணம் காறி உமிழப்பட்டும், கண்டோரால் ஏசப்பட்டும், கடிந்துரைக்கப்பட்டும், தாழ் நிலை அடைவரோ, அதுபோல ஆரியரின் நிலை ஆகிவிட்டது போலவும், அவர்களை எவ்வளவு கேவலமாக நடத்தினாலும் அடித்து விரட்டினாலும், ஏனென்று கேட்க ஒருவரும் இல்லை என்று கூறத்தக்க அளவுக்கு, ஆரியரை அன்னியர். அக்ரமக்காரர், அகற்றப்பட வேண்டியவர்கள், விரட்டப்பட வேண்டியவர்கள் என்ற முடிவுக்குச் சமூகத்தில் பெரும் பகுதியினர், அல்லது குறிப்பிடத்தக்க அளவினர் வந்துவிட்டது போலவும் எண்ணிக்கொண்டு, ஆரியரை நடுத்தெருவில் நாள் முழுவதும் போட்டு அடி அடி என்று அடித்தாலும் ஏன் என்று கேட்பதற்கு நாதி இல்லை என்று தீட்டுகிறார், தீ! தீ! தீ! என்று மும்முறை சொன்னதும் எந்தத் திக்குநோக்கி கூறுகிறாரோ, அது பற்றி எரிந்து போகும் என்று எண்ணிடும் இயல்புடையவர்.

'விடுதலை'யில் இந்த மணிவாசகம் வெளிவந்ததினாலேயே, இது பெரியாரின் கருத்து என்று கொண்டுவிடுவதற்கில்லை. ஏனெனில், பெரியார் 'விடுதலை'யிலேயே எனக்கு விருப்பமில்லாத கருத்துகள் சில வேளைகளிலே வந்துவிடுகின்றன அவைகளை என் கருத்துகள் என நம்பிவிடாதீர்கள். என் கையெழுத்திட்டு வெளிவரும் தலையங்கத்தில் காணப்படும் கருத்துதான், என் கருத்து என்பதாகக் கூறியிருக்கிறார். எனவே ஆரியரை நடுவீதியில் போட்டு உதைத்தாலும் ஏன் என்று கேட்பதற்கு நாதி இல்லை என்ற அருமையான கண்டுபிடிப்புப் பெரியாருடையது என்று கூறுவதற்கில்லை! பெரியார் ஸ்தானத்தை வேகமாக எட்டிப் பிடித்திடுவதாகக் கொட்டாவி விடும் குணாளர் அவ்விதம் கருதக் கூடும்!!

திரிலோகமும் புகழும் சுந்தரன்!

தீரன்! வீரன்! கெம்பீரன்! உதாரன்!

என்று நள்ளிரவில் நாலுவீதி கேட்கும் உரத்த குரலில் பாடிவிடுபவன், போர்க்களத்தில் பெற்ற அரிய அனுபவத்தினால் அவ்விதம் பாடுகிறான் என்று பொருள்கொள்வார் உண்டா! அதுபோல, வீர மூட்ட, இதுபோல ஆரியராவது மண்ணாங்கட்டியாவது! நடுவீதியில் அடித்தாலும் கேட்க நாதி ஏது என்று பேசுவதன்மூலம், சமூகத்தில், தன்னம்பிக்கை அற்று, தாசர் நிலை பெற்று, எடுப்பார் கைப்பிள்ளையாய், ஏவல்புரிபவராய், எடுபிடியாய்க் கிடப்பவர்களின் உள்ளத்தில் வீரம் முளைத்திடச் செய்யலாம் என்பதற்காகக் கூறி இருக்

கக் கூடும். அல்லது, ஆரியர் உண்மையிலேயே பெற்றிருக்கும் செல்வாக்கும் வலிவும் வளருவது கண்டு அச்சப்பட்டு, வீரதீரமாகப் பேசி அந்த அச்சத்தை மறைத்துக்கொள்வதற்கும் இந்த முறை கையாளப்பட்டிருக்கக்கூடும்; இவ்விதமாகக்கூட இல்லாமல், ஏதோ இன்றைய 'அயிடம்' அது, காரசாரமாக இருக்கிறதா இல்லையா பார்த்துக்கொள் என்ற போக்கிலே எழுதப்பட்டுமிருக்கலாம்; எக்காரணம் கொண்டு எழுதப்பட்டிருந்தாலும், நாடாளும் காங்கிரஸ் தலைவர்களுடைய போக்கைக் கவனிக்கும்போது, இந்த வீராவேசப் பேச்சு துளியும் பொருந்துவதாகக் காணோம்.

நாதியில்லை! என்று துந்துபி முழக்கம் கேட்கிறது! ஆரியர் தாக்கப்பட்டாலும் கேட்க நாதி இல்லை என்று முழக்கமிடும் நேரத்தில், 'சென்னை ராஜ்ய சர்க்கார்' என்ன செய்கிறது, தம்பி! கவனித்தாயா! ஆரியரின் மனதிலே ஒரு துளி சஞ்சலம், முகத்திலே ஒரு சிறு கோபக்குறி, பேச்சிலே ஒருவிதமான வருத்தம் தெரிந்ததும், கிடுகிடுவென ஆடி முகத்தைத் துடைக்கவும், முகமன் கூறவும், ஐயா! வருந்தற்க! பிழை பொறுத்திடுக! தவறு ஏற்பட்டிருந்தால், எடுத்து இயம்பிடுக! ஏற்ற முறையில் கழுவாய் தேடிக்கொள்ளக் காத்துக்கிடக்கிறோம்! உமது உள்ளத்தில் ஒரு துளி வேதனை தோன்றினாலும் உலகம் தாங்காதே! கோபம்கொண்டு ஐயன்மீர்! எம்மீது சாபத்தை வீசாதீர்! சரணம் ஐயா! சரணம்! —என்று கெஞ்சிக் கூத்தாட முன் வருகிறது! விடுதலையார் கூறுகிறார் 'வீதியில் போட்டு அடித்தாலும் ஆரியருக்காகப் பரிந்து பேச நாதி இல்லை என்று; நாடாளும் தலைவர்களோ, நான், நீ, என்று போட்டிபோட்டுக்கொண்டு முன் வருகிறார்கள், ஆரியரின் முகக் கோணலைப் போக்க, மனவருத்தத்தை நீக்க!!

ஆரியர், அடித்து ஒழிக்கப்பட வேண்டியவர்கள் என்று சமூகமே முடிவு கட்டிவிட்டது என்ற பொருள்பட. அன்பர் எழுதுகிறார்; அவருடைய அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான தலைவர்களோ, 'தாசானு தாசர்'களாகி, ஆரியரின் தயவுக்குத் தவம்கிடக்கும் போக்கினராக உள்ளனர்!

காரணம்காட்டாமல் நண்பர் 'காரசாரமாக' எழுதிவிடவில்லை; காரணம் காட்டுகிறார், நம்பிக்கையுடன். ஆரியரை நடுத்தெருவில் போட்டு அடித்தாலும் ஏன் என்று கேட்க நாதி இல்லை என்கிறார், ஏன் என்ற காரணமும் கூறுகிறார்.

ஆரியர் செத்த பாம்புகளாகிவிட்டனர்!

பாம்பு உயிரோடு இல்லை, எனவே, அதைப்போட்டு அடிப்பதால் ஆபத்து இல்லை!!

அந்தத் 'துணிவு'கொண்டு அடிக்கும் வீரனை, ஏன் என்று யார் கேட்கப்போகிறார்கள்—கேட்க மாட்டார்கள்!

ஆனால், செத்த பாம்பை யாரும் அடிக்கமாட்டார்கள்!

கூட்டுக்கோல்கொண்டு குப்பை மேட்டில் தள்ளுவர், குப்பை கூளம் போட்டுக் கொளுத்துவர்!

பிரத்யேகமான இயல்பு படைத்த வீரர்தான் 'செத்தபாம்பு' கண்டதும் அடிப்பார்!

ஆரியர் செத்த பாம்பு ஆகிவிட்டனர்—அதாவது செல்வாக்கு படுசூரணமாகிவிட்டது — எனவே அவர்களை எப்படித் தாக்கினாலும் ஏன் என்று சேட்க 'நாதி' இல்லை, என்று எழுதி, மகிழ்கிறார்.

ஆரியர் செத்தபாம்பானது எப்படி?

அதற்கும் காரணம் காட்டுகிறார் **—ஆரியர்களின் அட்டகாசம் பல நூற்றாண்டுகளாக இங்கு எல்லைமீறிய நிலையிலிருந்தது. ஆனால் சு. ம. இயக்கத்துக்குப் பிறகு இவர்கள் செத்த பாம்புகளாகிவிட்டனர்!**

படித்து, வீர உணர்ச்சி பெறச் சொன்னார்களா, பிரித்துப் பிரித்து விளக்கமும் பொருத்தமும் பார்க்கச் சொன்னார்களா! அதிலும் நான் எழுதுவதை!!—என்று அந்த சோர்விலாச் சொற்போர்க் கோமான் கோபத்துடன் கூறக்கூடும்—நமக்கு அப்படி ஒரு பழக்கத்தைப் பெரியார் ஏற்படுத்திவிட்டதாலே இந்தத் தொல்லை — யார் கூறினாலும், பொருள், இருக்கிறதா பொருத்தம் இருக்கிறதா, முன் பின் சொன்னதற்கு முரணாகாமல் இருக்கிறதா, மூலக் கருத்தினைக் கெடுத்திடாத வகையில் அமைந்திருக்கிறதா, என்றெல்லாம் பார்க்கச் சொல்கிறது! இடி ஓசை கேட்கும்போது, ஆதிதாளமா, ரூபகமா என்று யாரும் ஆராய வேண்டியதில்லை, ஆனால் மன்றத்தில் அமர்ந்து, இசைபாடும்போது, தாளம் சரியாக இருக்கவேண்டும் என்றுதானே யாரும் எதிர்பார்ப்பார்கள்—அந்த முறையிலே, நான் பார்க்கிறேன், தம்பி, வேறென்ன!

ஆரியருக்கு நாதி இல்லை, — இந்தப் பேருண்மையை நாட்டுக்கு அளிக்கிறார்.

நாதி இல்லை என்பதை விளக்க உதாரணம் தருகிறார், ஆரியரை அடித்தாலும் கேட்க ஆள் இல்லை- என்று கூறுகிறார்.

சந்து முனையில், இருட்டு வேளையில், ஒண்டி சண்டியாக வரும் ஆரியரை அடித்துவிட்டு ஓடிவிடும் அற்ப காரியத்தை அல்ல அவர் கூறுவது, வாசகத்தைக் கவனி, தம்பி!

நடுத்தெருவில் நாள்முழுதும் போட்டு உதைத்தாலும் கேட்பதற்கு இன்று நாதி கிடையாது;

நாள்முழுதும்!

இதற்குக் காரணம், ஆரியர் செத்த பாம்பு ஆனது!

ஆரியர் செத்தபாம்பு ஆனதற்குக் காரணம், சு. ம. இயக்கம்!

சரி! தம்பி! இப்படி வாதம் நடத்திப்பார், சு. ம. இயக்கத்தின் பலனாக ஆரியர் செத்த பாம்பு ஆகிவிட்டார்களென்றால், செத்த பாம்பை அடிக்கக் கிளம்புவானேன், நடுத்தெருவில், நாள் முழுவதும் செத்தபாம்பைப் போட்டு அடித்துக்கொண்டு கிடப்பானேன்!

கோபத்தால் ஒரு தாவுதாவுவார் நண்பர், இவ்விதம் வாதாடினால். எனவே அவருக்கு அல்லல் வேண்டாம், அந்த வாதத்தை இந்த அளவுடன் நிறுத்திக்கொள்வோம்.

நாதி இல்லை என்கிறாரே, அது பொருந்துகிறதா, என்று இந்தக் கிழமை சட்டசபை நடவடிக்கையைப் படித்துவிட்டு எனக்குக் கூறு, தம்பி!

கே:- கடவுள் எங்கே இருக்கிறார்?

ப:- தூணிலுந் துரும்பிலுமிருக்கும் கடவுள் இன்று தங்கத்திலும் வெங்காயச் சங்கத்திலுமிருக்கிறார்.

(ஈழகேசரி)

நடுத்தெருவில் நாள் முழுவதும் அடித்தாலும், கேட்க நாதி இல்லை என்ற அரிய உண்மையை, செயல் மூலம் செய்து காட்டிடும், அரும்பெரும் காரியத்தை அவர்கள் செய்ய விட்டுவிடு—அவர்களுக்கே அந்த ஏகபோக உரிமை இருக்கட்டும்!

ஆரியரை இப்போது யாரும் அடிக்கவில்லை! சர்க்கார், சில பிரச்சாரத் தாட்களை அச்சடித்தனர். நாதி இல்லை! நண்பரின் திருவாக்கல்லவா இது! சர்க்கார், அச்சடித்தார்கள், ஆரியர் எச்சரித்தார்கள், சர்க்கார் அச்சடித்ததை அழித்தொழித்தார்கள்!

நடுவீதியில் நாளெல்லாம் போட்டு அடித்தாலும் கேட்பதற்கு நாதி இல்லா நிலைக்கு இது எடுத்துக்காட்டா, தம்பி! எண்ணிப்பார்!

தீண்டாமை ஒழிப்பு சர்க்கார் திட்டத்திலே ஒன்று—மிக முக்கியமானதுங்கூட! அரசியல் சட்டம் இதை வலியுறுத்துகிறது. நாட்டு மக்களுக்கு இதை எடுத்துக் காட்டி, நல்லறிவுச் சுடர் கொளுத்த, அரிஜன இலாகாவின் மூலம் சர்க்கார், பிரசாரத் தாட்கள் வெளியிட்டு, நாடெங்கும் அனுப்பினர். தம்பி! சர்க்கார் வெளியிட்டதை அனேகமாக நீ கண்டிருக்கமாட்டாய், நமது கழகம் அதுபோல அச்சிட்டு அனுப்பியது கண்டிருப்பாய்! இப்போதும் ஒரு முறை, அதைப் பார், தம்பி! அதிலே, ஆரியரை இழிவு படுத்துவது என்ன காண்கிறோம்!!

மோட்ச லோகம் என்ற புரட்டுப் பேசி என்னிடம் பறித்த பொருளை மூட்டை கட்டிக்கொண்டு போகிறாயா, முழு மோசக்காரா! இறக்கு மூட்டையை! எடு ஓட்டம்!! என்று கேட்டு, ஒரு சிறு கூட்டம், ஆரியனை அடித்து விரட்டுவது போலப் 'போஸ்டர்' அல்ல அது.

ஐயா! உலகோரே! உங்கள் நாட்டிலெல்லாம் இல்லாத ஒரு அதிசயம் காணீர்! இதோ இவன், பிரமனின் முகத்தில் பிறந்தவன்! என்று கூறி, ஆரியரை, மற்ற நாட்டவரிடம் காட்ட, அவர்கள் கை கொட்டிச் சிரித்து, மடைத்தன மிக்கவனே! அப்படியா கூறினாய்? என்று கேட்டுக் கேலி செய்வது போன்ற, பிரசார போஸ்டர் அல்ல!!

பிச்சைக்காரன் கோலம், பெருந்திண்டிக்காரன் கோலம் காட்டிடும் போஸ்டர்கூட அல்ல!

தீண்டாதவனே, தொடாதே என்று கூறும், வைதீகன் சர்க்கார் சட்டப்படி, சிறையில் தள்ளப்படுகிறான் என்பதை விளக்கும் போஸ்டர்!

இது, ஆரியருக்கு ஆத்திர மூட்டிவிட்டது! செத்த பாம்பு, படமெடுத்தாடிற்று! சென்னை சர்க்கார், 'நாகபூஜை' செய்து, 'சினம்விடுக! பிழை பொறுத்திடுக' என்று கெஞ்சுகிறது!

டால்மியாபுரம், கல்லக்குடி ஆக்கப்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சி, பொதுமக்களிடம் பரவி இருந்தது போல,

இரயில்வேஸ்டேஷன் போர்டுகளில் இந்தி ஆதிக்கமொழி இருப்பது அக்ரமம் அதனை அழித்திட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சி நாட்டில் வலிவுடன் வடிவெடுத்தது போல,

தமிழரின் எல்லையைப் பிறமொழியாளர் பறித்திடும் அக்ரமத்தை அனுமதிக்க மாட்டோம் என்ற கிளர்ச்சி, நல்லோர் உள்ளத்தை எல்லாம் தொட்டு, நாட்டிலே நல்லநிலை அடைந்தது போல,

ஆஹா! ஆரியரை இங்ஙனம், அவமதிப்பதா, அரசாங்கம் இந்த அக்ரமத்துக்கு இடம் தருவதா, என்று கோபித்துக் கொதித்தெழுந்து பொதுமக்கள் கேட்டனரா, என்றால் இல்லை!

பார்ப்பனர்கள் சிலர்—அதிலும், சர்.சி.பி. இராமசாமிஐயர், இராமசாமி சாஸ்திரிகள், இராஜகோபாலாச்சாரியார், அனந்தராம கிருஷ்ணஐயர், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, வி.டி இரங்கசாமிஐயங்கார், போன்ற பிரபலஸ்தர்கள் கூட அல்ல; சிலர் கூடினர், சீறிப்பேசினர், திருச்சியில் நகர்ச்சதுக்கத்தில்-'இந்து' ஒரு குட்டித்தலையங்கம் தீட்டிற்று அவ்வளவுதான்! சர்க்கார், சத்தம் வரும் திக்கு நோக்கிச் சரணம்! சரணம்!! என்று கூவுகிறது!!

துக்க தினம் கொண்டாடுவோம்—இந்த போஸ்டர் எமது மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது—உடனே வாபஸ் பெறுக — என்று 'செத்த பாம்புகள்' கூறின, உடனே, சகல கட்சிகளையும் அணைத்துக்கொள்ளும் சரசாங்கிச் சர்க்கார், அடியற்ற நெடும்பனையாகிறது!

நாதி இல்லை!

பார்த்தாயா தம்பி, நாதி, யாருக்கு இல்லை என்பதை!!

30,125 போஸ்டர்கள் அச்சிட்டனர், 5000-ரூபாய் செலவிட்டனர். ஆரியர் ஒரு சிறு கண்டனம் கிளப்பினர், அவ்வளவுதான், சர்க்கார், பாய்சுருட்டிக்கொண்டது! இந்த நிலைமைக்கு என்ன பெயர்? நாதி இல்லை என்பதா!

பார்ப்பனரின் மனம் புண்படக் கூடாது என்று சர்க்கார் கருதுவதுகூட ஆச்சரியமல்ல, உமது மனம் புண்படும்படி, அந்த போஸ்டர் இல்லையே என்று விளக்கம் கூறக்கூடச் சர்க்கார் அச்சப்படுகிறதே அதுதான் உண்மையிலேயே ஆச்சரியம்!

தீண்டாமை எனும் கொடுமை, ஆரிய மார்க்கத்தின் விளைவு—ஆரிய மார்க்கத்தின் பாதுகாவலர் ஆரியர். ஆகவேதான் ஆரிய உருவம் பொறித்தோம் — இதை ஆட்சேபித்துப் பேசுவது அறிவற்ற செயலாகும், சர்க்கார் இத்தகைய அறிவற்ற செயலை மதிக்காது, தன் திட்டத்தை மாற்றிக்கொள்ளாது என்று எடுத்துரைக்கும் ஆண்மையாளர் அங்கே காணோம்—நடுவீதியில் போட்டு அடித்தாலும் கேட்க நாதி இல்லை என்று பேசும் வீரம் இங்கே இருக்கிறது, ஏட்டில்! அந்த ஏடு, ஆட்சிக்குக் 'கேடயம்' ஆகி மகிழ்கிறது! தம்பி! ஆரியர் கைகொட்டிச் சிரித்திட இதைவிட வேறு என்னவேண்டும்.

வைதிகர்கள் தீண்டாமையை ஆதரிக்கிறார்கள்; அவர்களுக்குச் சட்டத்தை நினைவுபடுத்தவே, இந்தப் போஸ்டர்: இதிலே பொறிக்கப்பட்டுள்ள உருவம், பார்ப்பனருடையது என்று பார்ப்பனர் ஏன் கருத வேண்டும்?

தோழர் விநாயகம் M. L. A. இதைக் கேட்டார்—அந்த நேர்மையை நான் பாராட்டுகிறேன்.

உச்சிக்குடுமியும் பூணூலும் பார்ப்பனருக்கு மட்டும்தானா, வன்னியகுல க்ஷத்திரியரிலே சிலருக்கு இல்லையா, ஆசாரி குலத்திலே இல்லையா—என்று தோழர் விநாயகம் எடுத்துக் கேட்டதுடன், சர்க்கார் இந்த எதிர்ப்புக்கு மறுப்பளிக்காமல், முதுகெலும்பற்ற முறையில், நடந்துகொண்டதை இடித்துரைத்தார். அவர் எடுத்துக் காட்டியபடி, "உச்சிக்குடுமியும் பூணூலும்" ஆரியரல்லாதவர்களிடமும் இருக்

திடக் காண்கிறோம்—பொதுவாக, பண்டைப் பெருமையும் இந்து மத மாண்பும், உச்சிக்குடுமி பூணூல், மடிசஞ்சி போன்ற கோலத்தில் இருப்பதாகக் கருதுபவர்கள், ஆரியக் கோலத்தில் உள்ள திராவிடர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். போஸ்டர், பார்ப்பனரைக் குறிப்பிட்டு அல்ல, வைதிகத்தைக் குறிப்பதாக இருக்கிறது என்று சர்க்கார் விளக்கம் அளித்திருக்கலாம் — ஆனால் முதுகெலும்பு இல்லை, முப்புரியினரின் கோபத்தைத் தாங்கிக்கொள்ளும் சக்தி இல்லை; எனவே சரணாகதி அடைகிறது!

தம்பி! இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பார்ப்பனரல்லாதாருக்கு 'வேலைகள்' கொடுத்ததாம் இந்தச் சர்க்கார்—இதற்கே வெண்சாமரம் விசுகிறோம் என்கிறார்கள்—வேடிக்கை அதுகூட அல்ல, நாங்கள் ஏன் வெண்சாமரம் வீசுகிறோம் தெரியுமா, நீ வெண்சாமரம்வீசலாம் என்று எண்ணுகிறாய், உனக்கு அந்த இடம் தரக்கூடாது என்பதற்காகவே, நாங்கள் வெண்சாமரம் விசுகிறோம் என்றுவாதாடுகிறார்களே, அதுதான் வேடிக்கை. போகட்டும். வலி எடுக்கும் வரையில் விசட்டும். ஆனால் ஒன்று! பார்ப்பனரல்லாதாருக்கு வேலைகள் கொடுத்துவிடுவதால், ஆரிய ஆதிக்கத்தை ஒழித்துவிட முடியுமென்றால், அந்தத் திட்டத்தை மட்டுமே மலை என நம்பிவந்த ஜஸ்டிஸ் கட்சி போதுமென்று இருந்துவிட்டிருக்கலாமே!

ஆரிய ஆதிக்கம் என்பது அவ்வளவு எளிதாக, சில பதவிகளைப் பார்ப்பனரல்லாதார் பெறுவதன் மூலமாக மட்டுமே போகக்கூடியதுமல்ல, ஆரியரை அடித்து விரட்டுவோம், நடுவீதியில் நாள் முழுதும் அடித்தாலும் கேட்க நாதி கிடையாது என்று பேசிவிடுவதால் போகக்கூடியதுமல்ல.

ஆரியர் ஆதிக்கம் செலுத்துவதற்குக் காரணம், ஆரியம், ஆரியரிடம்மட்டுமல்லாமல், திராவிடச் சமுதாயத்தினரிடம் இன்னும் பெருமளவுக்கு இருப்பதனாலும், ஆரியத்திடம் அச்சப்படும் நிலையில் ஆளவந்தார்கள் இருப்பதனாலும்தான். எனவேதான் தம்பி! நமது கழகம், ஆரியரை ஒழித்திடும் வேலையை அல்ல, ஆரியத்தை ஒழித்திடும் வேலையில் ஈடுபடுகிறது! இது ஆரியரை ஆதரிக்கும் அற்பத்தனம் என்று கூறுவோர், நாம் மனித உருவம் பெற்றிருப்பதே சகிக்க முடியாத அக்ரமம் என்ற அளவுக்குத் 'துவேஷம்' கொண்டவர்கள்.

ஆரியம், அனந்தாச்சாரியிடம் மட்டும் இல்லை, அம்பலவாண முதலியாரிடமும் இருக்கிறது, ஆதிசேஷ செட்டியாரிடமும் இருக்கிறது, நெய்யாடிவாக்கம் முதலியாரிடமும் இருக்கிறது, குன்னியூர் ஐயரிடமும் இருக்கிறது! விநாயகம் எடுத்துக்காட்டிய படி, உச்சிக்குடுமியும் பூணூலும்கூட ஆரியரிடம் மட்டுமல்லவே, படையாச்சிகளிடம் இருக்கிறது, பத்தர்களிடம் இருக்கிறது, நாயுடுகளிடம் இருக்கிறது, ஏன், காமராஜரின் நாடார் சமூகத்தில்கூட பழமை விரும்பிகளிடம் இருந்திடக் காண்கிறோம். எனவேதான், ஆரியரை ஒழிப்பது என்பது நமது திட்டமாகாமல், ஆரியத்தை ஒழிப்பது நமது திட்டமாக இருக்கிறது. இதிலே நமக்குத் தெளிவும் நம்பிக்கையும் ஏற்படும் வகையில் பெரியார் அறிவுரை கூறியிருக்கிறார். நாம் அந்தப் பாதையில் செல்கிறோம்.

ஆரியம், ஆரியரிடம் மட்டுமல்ல, திராவிடரிடமும் புகுத்தப்பட்டிருக்கிறது; அதைப் புகுத்தி, பாதுகாத்து வரும் பணியில் ஆரியர், ஆரியக் கோலத்தில் இல்லாவிடினும்கூட ஈடுபடக் காண்கிறோம். எனவே, ஆரியம் களையப்படுவதற்கான அறிவுப் பிரசாரத்தைத் திறம்பட நடத்துவதுதான் முறையே தவிர, அக்ரகாரத்தில் தீமூட்டுவதல்ல என்று கூறுகிறோம்.

'போஸ்டர்' விஷயத்திலே, 'சர்க்கார்' இந்த அளவுக்கு ஆரியரிடம் அச்சப்பட்டு அடி பணிகிறது என்றால், அக்ரகாரத்தைக் கொளுத்த பெட்ரோல் டின்கள் வாங்கித் தரும் என்று, எதிர்பார்த்தா, அதற்குச் சாமரம் வீசிக் கொண்டுகிடப்பது! தமிழரிடம் பற்றும் பரிவும்கொண்ட ஒரு சர்க்காருக்காக நாம் தவங்கிடந்தது கண்டு காலதேவன் கருணை கொண்டு, காமராஜர் சர்க்காரை நமக்கு அருளி இருப்பது போலவும், இந்தச் சர்க்காருடைய சக்தியைத் துணைகொண்டு, ஆரியரை ஒழித்திடும் காரியத்தைக் கூடச் சாதித்துக்கொள்ளலாமென்றும் பகற்கனவு காண்போருக்கு, இந்த சர்க்காரும் ஏனைய சர்க்கார்போலவே ஆரியருக்கு அடிபணியும் சர்க்கார்தான் என்பதைச் சென்ற கிழமை சட்டசபைப் பேச்சு எடுத்துக் காட்டுகிறது.

எனவே தம்பி! நாம் ஆரியத்தை, அறிவுச் சுடரால் அழித்தொழிக்க வேண்டும்—அந்த ஆரியம் அக்ரகாரத்தில் மட்டுமில்லை!

எட்டிப்போடா சூத்திரப்பயலே!—என்று ஐயர் பேச்சும் ஆரியம்தான்!

கிட்டே வராதே சேரிப்பயலே! என்று பேசும் முதலியார் முடுக்கும் ஆரியம்தான்!

படையாச்சிக்கு இவ்வளவு உயர்வா? என்று கேட்கும் பேச்சும் ஆரியம்தான்!

மறவர் முன்பு மட்டுமரியாதையோடு நட! தேவர் வருகிறார், எழுந்து நில்! நாடார் அழைக்கிறார், ஓடிவா! செட்டியார் கேட்கிறார், தட்டாமல் கொடு! — என்று ஆரியம், பலப்பல முறைகளிலே தலைவிரித்தாடுகிறது, தம்பி, பல முறைகளில்!

ஆரியம், ஒரே இடத்தில், ஒரே கூட்டத்தாரிடம், ஒரே முறையில் இருக்குமானால், அந்த ஒரு இடத்தை, ஒரு கூட்டத்தை, ஹிட்லர், யூதர்களை விரட்டினானே, அதுபோலச் செய்துவிடவேண்டும் என்று பேசுவது, ஓரளவுக்காவது பொருத்தமானதாகத் தெரியக் கூடும். ஆனால், ஆரியம், இருக்கும் இடம், அக்ரகாரம் மட்டுமல்ல!

பாரேன், தம்பி! ஆரிய ஆச்சாரியார் விலகினார், திராவிடக் காமராஜர் வந்தார் என்று, 'உருவம்' கண்டு உளம் பூரித்துக் கிடந்தது என்ன ஆயிற்று! ஆரியம் திராவிட உருவினர் ஆட்சியிலும் இருந்துகொண்டு, வெற்றி!வெற்றி! என்று கொக்கரிக்கிறதே!

எனவே, நமது பணி தம்பி! அக்ரகாரத்தை நோக்கிப் படை எடுத்து அதை 'பஸ்மீகரம்' செய்துவிடப் போவதாகக் கூறிவருவது அல்ல; ஆரியம் இருக்கும் இடம் எல்லாம் அறிவுச் சுடர் கொளுத்தி அதன் மூலம், ஆரியத்தை ஒழிப்பது ஆகும்!

உடல் படபடவென ஆடாது. உள்ளம் 'கிடுகிடு'வெனக் குதிக்காது! பேச்சிலே, எள்ளும் கொள்ளும் வெடிக்காதே!—இந்தத் திட்டத்தில் என்பார்கள் — ஆனால், வெற்றிக்கு வழி நாம், கொண்டிருப்பதுதான், அது இராயபுரத்து 'அரைடஜன் சிறுவர்கள்' தீட்டியதுமல்ல, பெரியார் தந்த திட்டம்!!

அன்பன்,

அண்ணாதுரை.

எட்டு நாட்கள்

—ப—

"அரசே! நான் ஒரு தத்துவ ஆசிரியன்; அவ்வளவு தான்"

பாரிஸ் பல்கலைக் கழகப் பேராசிரியர் வேலையை, உதறித் தள்ளிவிட்டார் ப்ரூனோ.

தன்னிடம் அன்பு காட்டிய மன்னன் கூறியும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமறுத்த 'உத்தமன்' ப்ரூனோ! துளியாவது அச்சம் மனதிலிருந்தால், அரசனிடம் இவ்விதம் பேசுவதா என்று எண்ணத் தோன்றியிருக்கும். சிறிதளவாவது, ஆசைக்குக்கட்டுப்படும் சுய நலம் இருந்திருந்தால், தொழுகை தானே! என்று கூறிவிட்டு, பேராசிரியராகி இருக்கமுடியும்! ஆனால், ப்ரூனோவின் இயல்பு அவ்வளவு உயர்தரமானது! ஆசைக்கு ஆட்பட்டு, பொய்யொழுக்கம் கொள்ளமறுக்கும் தூய்மையாளர் அவர்.

அவருக்கா, சிறையிலே, ஆசைபிறக்கும்? எட்டு நாட்களா? இதுபோல, ஆசையூட்டும் சம்பவங்களை அவர், பல கண்டிருக்கிறார், எல்லாவற்றையும் வென்றிருக்கிறார். எனவே, எட்டு நாட்களை வீணாக்குகிறார்கள்! எட்டு நாட்கள், ப்ரூனோவை, அவருடைய கொள்கையை எடுத்துரைக்கவும், வாதிடவும்' பயன்படுத்தச் சொல்லியிருந்தால், வாய்ப்பு என்று கூறி, ஏற்றுக்கொண்டிருப்பார். இப்போதோ சாகத்துணிந்த அவரைச்சாகடிக்க எட்டு நாட்கள் கழியவேண்டி இருக்கிறது!

தான் உரைக்கும் கொள்கையை மறுத்திட, வாதிட, யார் முன்வந்தாலும், ப்ரூனோ மகிழ்ச்சியுடன் வரவேற்பவர். அந்த வாதிடும் திறமை பாராட்டுதலை மட்டுமல்ல; பகையைப் பெற்றுத்தந்தது, எனினும், பகை வளருகிறது, ஆபத்து ஏற்படுகிறது என்பதற்காகக் கொள்கையை விட்டுக்கொடுப்பவரல்ல ப்ரூனோ. நாம் கொண்டுள்ள கொள்கையை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு மக்கள், அறிவாளிகள் உட்பட, பக்குவம் பெறவில்லை, இந்நிலையில் நாம் ஏன், வீணாகப்பாடுபடவேண்டும்—எதைப் பேசினால் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ அதைக் கூறிப் புகழ்பெறலாம், அல்லது எந்த அளவுக்குக் கூறினால், மக்கள் உள்ளம் அன்று இருந்த நிலையில் தாங்கிக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குக் கூறிக்கொண்டிருப்போம், என்று திருப்தி கொள்பவரும் அல்ல. மிகமிகத் தெளிவானது—அப்பழுக்கற்ற ஆதாரமுள்ளது நான் கொண்டுள்ள கொள்கை—இதனை மறுப்போரோ, மணலில் கோட்டை கட்டிவைத்துக்கொண்டிருப்பவர்கள், அவர்களுடைய கொள்கைகளில் தெய்வீகம் இருப்பதாகக் கூறுகிறார்கள், தெளிவு இல்லை, காட்டவும் இயலவில்லை; அருள்வாக்கு என்கிறார்கள், அக்ரமத்தைக் கூசாமல் புரிகிறார்கள், பற்று அறுபடச்செய்யும் பாசுரம் பாடுகிறார்கள், பாபச்செயலை அஞ்சாது செய்கிறார்கள்; இவர்களுக்கு அஞ்சி, நான் என் அசைக்கொணாத கொள்கையைக் குடத்திலிட்ட விளக்காக்குவதா! குத்தட்டும், வெட்டட்டும், உயிர் இருக்கு

சி.என். அண்ணாதுரை.

மட்டும், போராடுவேன், வாதாடுவேன், குன்றின் மேலிட்ட விளக்காக்குவேன் என் கொள்கையை; அதனை எடுத்துக் கூறிட வாய்ப்பு, எப்படிப்பட்ட சூழ்நிலையில் கிடைத்தாலும், பயன்படுத்திக்கொள்வேன், என்ற கருத்துடன் அவர் பணிபுரிந்து வந்தவர். எந்த வாய்ப்பையும் அவர் நழுவவிட்டதில்லை; அதன் பலனாக என்ன விளைவு நேரிட்டாலும், தாங்கிக்கொள்ளத் தயங்கினதுமில்லை.

பிரன்ச்சு மன்னன், ப்ரூனோவின் மனப்போக்கைக் கேட்டுக் கோபித்துக்கொண்டான்; வருந்தினான், வெறுத்துவிடவில்லை. எப்படி வெறுக்கமுடியும்! மன்னன், புன்னகைப் புலிகளையும் நயவஞ்சக நரிகளையும் காண்கிறான்!, காவி அணிந்து திரியும் காமாந்தகாரர்களையும் அருட்கவி பாடி அக்ரமம் புரிவோரையும், பிறர் பொருள் கவரும் பேயரின் பூஜாமாடங்களையும் கண்டிருக்கிறான். மன்னன் கூறினாலும், என்மனதிலுள்ளதை மாற்றிக் கொள்ளமாட்டேன், மறைத்துவைத்து இச்சகம் பேசித் திரியவும்மாட்டேன், என்று தூய்மையான உள்ளத்துடன் இருந்த ப்ரூனோவிடம், வெறுப்பு அடைய முடியுமா! அவர் சொல்லும் கொள்கை, மன்னனுக்கு உடன்பாடானது அல்லதான் — சரியா தவறா என்று ஆராய்வது கூடத் தேவையில்லை என்று கருதினான்; ஆனால் மன்னனும், மண்டலமும் சீறும் என்று அறிந்தும், உண்மையைக் கூறிவிட்ட நேர்மையைப் பாராட்டாதிருக்க முடியுமா? ப்ரூனோ தன்னிடம் சொன்ன உண்மையை ஊர் அறிந்தால் ஆபத்து என்பது மன்னனுக்குத் தெரியும். மத அதிபர்களின் கோபத்தை எந்த மன்னனும் தாங்கிக்கொள்ள முடியாதல்லவா; மண்டலமே சீறும்; மாதாகோயில்களெல்லாம் சாபமிடும். ப்ரூனோவின் கொள்கை தெரிந்துவிட்டால், மத அதிபர்களும், அவர்களின் கோட்டை என விளங்கிய சோர்போன் பல்கலைக் கழகமும், பகை கொள்ளும்; அதுபோது, தன்னால்கூட, ப்ரூனோவைக் காப்பாற்ற முடியாது என்றறிந்த மன்னன் இங்கிலாந்து நாட்டிலே இருந்த பிரன்ச்சுத் தூதுவருக்கு ஒரு கடிதம் கொடுத்து அந்த நாடு சென்று வதியுமாறு, ப்ரூனோவுக்குக் கூறினான். ப்ரூனோ, இங்கிலாந்துவந்த சமயம், அங்கு, கலையும் காவியமும், வீரமும் காதலும், செல்வமும் சீரும், கொஞ்சி விளையாடிய, எலிசபெத் இராணியின் ஆட்சிக்காலம்.

இங்கு, ரோம்நகர மத அதிபர்களின் ஆதிக்கம் இல்லை; மத விசாரணைக்கூடக் கொடுமைகள் இல்லை; புத்தம் புதிய போக்கு வரவேற்கப்பட்டது, பொற்காலம் என்று புகழ்ந்தனர். இங்கு ப்ரூனோவின் புகழ் வளர வழி இருந்தது—கொள்கையை எடுத்துக்கூறும் வாய்ப்பு ஏற்பட்டதும், மீண்டும் ஆபத்து ப்ரூனோவைத் துரத்தலாயிற்று.

என்ன கொள்கை அது?

மத ஏகாதிபத்யத்தை முறியடித்து, ரோமாபுரியின் எதேச்சாதிகாரத்தை எதிர்த்து நின்று, லூதரின் புரட்சி இயக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்த இங்கிலாந்திலும், பகையை மூட்டிய, அந்தக் கொள்கை என்ன? இங்கிலாந்தில் மட்டுமல்ல, கால்வின்'

சித்தரித்த சீர்திருத்தத்தைச் செம்மையாக்கி வாழ்ந்த, சுவிட்சர்லாந்திலும், ப்ரூனோவின் கொள்கைமீது சீறிப் பாய்ந்தனர். கத்தோலிக்க நாடுகள் மட்டுமல்ல, பிராடெஸ்டென்டு நாடுகளும், பாபம்! மோசம்! அக்ரமம்! அனுமதியோம்! என்று கூவின; அப்படிப்பட்ட கொள்கையை ப்ரூனோ கூறிவந்தார்.

கொலை கொள்ளை எனும் தீச்செயல் புரிகிறவனை மகா சன்னிதானம் என்று போற்றுகிறீர்களே, இந்த மடைமை ஆகுமா? என்று கேட்டார், மார்டின்லூதர்—கால்வின், ஜிவிங்லி, போன்றோரும் இதையே கூறினர்—மக்கள் முதலில் மருண்டனர், பிறகு "ஆமாம், இந்த மடைமை ஆகாது. நமக்கு மோட்ச வழி காட்டியாக நாம் ஒரு தூய்மையாளரைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறினர்; லூதர் வென்றார்.

"பாவத்துக்குப் பரிகாரம், மனதால் கழுவாய் தேடுவதுதானே—காணிக்கை கொடுத்தால் பாவம் மறையுமோ! மறையும் என்று வாணிபம் செய்கிறார் மத அதிபர்! ஏற்றுக்கொள்கிறீர்களே, ஆராய்ந்து பாராமல். காணிக்கை கொடுத்துப் பாவத்தைக் கழுவிக்கொள்ள முடியுமானால், பணக்காரர், கொலை, கொள்ளை, கற்பழித்தல், எனும் எந்தப் பாவமும் புரியலாம், தப்பித்துக்கொள்ளலாம், அல்லவா? இதுவா அறம்? இதுவா மார்க்கம்? இதுவா கர்த்தரின் கட்டளை? இதுவா சுவிசேஷம்?" என்று கேட்டனர், பிராடெஸ்டென்ட் இயக்கத்தினர்—மக்கள், தெளிவு பெற்றனர்—துணிந்து போப்பாண்டவரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டனர்.

இந்த அளவுக்குத்தான் மக்கள் தயாராயினர்.

கயமையைக் கண்டிக்கவும் தூய்மையைப் போற்றவும், முன்வந்தனர்.

மத அதிபர்கள், மாசுமருவற்றவர்களாக இருத்தல் வேண்டும்—ஒழுக்க சீலர்களாக விளங்க வேண்டும் என்று கோரத் தலைப்பட்டனர்.

ப்ரூனோ, மத அதிபர்கள், எப்படி இருக்கவேண்டும், கயமை நிரம்பியவர்கள் கூடாதல்லவா, தூய்மை உள்ளவர்கள்தானே தொழுகை நடாத்தும் தகுதியுடையார், என்ற பிரச்னையை அல்ல, எடுத்துரைத்தது. அவர், இப்படிச் சில அதிபர்களே தேவைதானா; அவர்கள் நடாத்தி வைக்கும் தொழுகைகள், சடங்குகள், ஆகியவைகளால் மக்களின் ஒழுக்கம் மேம்படவும், மனம் தூய்மை பெறவும், செயல் சீர்படவும், மார்க்கமுண்டா என்ற அடிப்படையை அலச ஆரம்பித்தார்.

மற்றவர்கள், கட்டிடத்துக்கு என்ன வண்ணச் சுண்ணம் பூசினால், கவர்ச்சிகரமாக இருக்கும் என்ற ஆய்வுரையில் களித்தனர். ப்ரூனோ, அந்தக் கட்டிடம், உனக்கும், உள்ளத்துக்கும், சிறைக்கூடம் ஆகிவிடக் கூடாதே, என்று எச்சரிக்கை கூறினார்.

மத ஏடுகளிலே காணப்படும் மாண்புகளின் படி, மத அதிபர்கள் நடந்துகொள்கிறார்களா, என்பதை லூதர், கால்வின், போன்றோர், ஆராய்ந்தனர்; ப்ரூனோ, மத ஏடுகளிலே மாண்புகள் என்று கருதப்படுவன, உண்மையிலேயே மாண்புகள்தானா என்று ஆராய்ந்தார்! அந்த மட்டோடு நிற்கவில்லை, புத்தறிவு தரும் புது உண்மைகளுக்கும், மத ஏடுகளில் காணப்படும் கருத்துகளுக்கும் உள்ள முரண்பாட்டை, எடுத்துக்காட்டினார்.

ஆன்ஸ்லம் பாதிரியார், ப்ரூனோவை, மடாலயத்தில் இருந்தபோதே இதற்காகத்தான் எச்சரிக்கை செய்து வைத்தார். அவர், மடாலயக் கொள்கையில் ஊறிப் போனவர், எனினும், புத்திக்கூர்மையும் நற்பண்பும் உள்ள ப்ரூனோவிடம் மட்டற்ற ஆசைகொண்டவர்; எனவேதான், எச்சரித்தார்.

(வளரும்)

குடிக்க! கூத்தாட!!

ஓட்டல் ஒன்று ஏற்படப் போகிறதாம் புது டெல்லியில். ஒரு கோடி ரூபாய் முதலாம். 25 இலட்சம் கொடுத்து, ஓட்டல் நிர்வாகத்தில் பங்கு எடுத்துக் கொள்ளப் போகிறதாம், சர்க்கார். இது அவசியமா, தேவையா? ஏழைகளும் இல்லாதவர்களும், இருக்கவும் இடமில்லாமல் எத்தனையோ பேர் டில்லியில் அலையும்போது கோடி ரூபாய் செலவழித்து, ஓட்டல் ஒன்று ஏன்? என்றெல்லாம், குமுறல் கிளம்பியிருக்கிறது, பார்லிமெண்டில். கூறப்பட்டபதில் என்ன தெரியுமோ? அடுத்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவுக் கூட்டம் புது டில்லியில் நடைபெறப்போகிறதாம் — அதற்கு, அகில உலகிலிருந்தும் 1000 பிரதிநிதிகள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறதாம். அப்படி வரும் ஆயிரம் பேர்களைத் தங்க வைக்க டில்லியில்வசதியில்லையாம் நூறு, நூற்றைம்பது பேருக்குமட்டும்இயலுமாம், ஆகவே...என்றார், அமைச்சர், காரணத்தை விளக்கும்போது. "என்னய்யா, இது, ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைத்த கதையாக இருக்கிறதே, ஒரு மாநாட்டுக்காக, ஒரு கோடி ரூபாயா—அப்படி 1000 பேர் ஒரு முறை வந்துவிட்டுப் போனால், போதுமா—பிறகு, ஓட்டல் எப்படி நடக்கும்? என்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். சரியான பதில் தரப்படவில்லை. டெல்லிசர்க்காரின் மேற்பார்வையில் கட்டப்படும் அந்த ஓட்டலில், குடி கூத்து எல்லாவற்றுக்கும் வசதியிருக்குமாம். முக்கியமான அம்சங்கள் இவை. குடி—அது முடிந்ததும், நாகரீகபாணியில் கூத்து, இரண்டும் கிடைக்குமாம். "என்ன, புதிய ஊழல் மாளிகையோ?," என்று கேட்டிருக்கிறார், ஒரு மெம்பர். இன்னொருத்தர், "ஏற்குமோ இது? காங்கிரஸ் சர்க்காரா தாங்கள் பொறுப்பேற்கும் ஓட்டலை, மதுபானக் கடையாக்குவது," என்று கதறியிருக்கிறார். எப்படிக் கண்டித்தாலென்ன—ஒரு ஓட்டல், வேண்டும் என்பது நேரு பண்டிதரின் ஆசை—கவலை—ஒரு கோடியில் ஓட்டல் கட்டு, உதவுகிறேன் 25 லட்சம், என்று உத்தரவு கிளம்பிவிட்டது. மதுவும், மாதரும் கிடைப்பர்; குடிக்கவும் கூத்தாடவும் என்று தகவலும் அறிவிக்கப்படுகிறது.

பாரத நாட்டுக்கிணை பாரத நாடே.

★

திறப்பு விழா!

(சிறு கதை)

வெற்றிபுரம் வேந்தர் வேழமுகத் தாரின் உருவச்சிலை திறப்பு விழா வைபவம்பற்றி, எங்கும் ஒரே குதூகலம்.

வேந்தருடைய அருங்குணங்களைப்பற்றிப் பேசுபவரைவிட, உருவச்சிலை சமைத்த சிற்பியின் கலைத்திறனைப்பற்றியே அதிகமாகப் பேசினர்.

உண்மையைக் கூறுவதானால், 'வைபவம்' வேந்தருக்குப் பெருமை தருவதாக அமையவில்லை, சிற்பியின் திறமைக்குப் பெருமை அளிக்கும் திருநாளாக அமைந்தது.

சிற்பி சந்தனத்தேவன், தன் கலைத்திறன் முழுவதையும் அந்த சிலை சமைப்பதில் காட்டி இருந்தான்.

மன்னனே, சிலையைக் கண்டு மலைத்துப் போனான்.

“இன்றிருக்கும், நாளை என்ன ஆகுமோ!” என்று மதகுரு, அடிக்கடி கூறுகிறார், மனித உடலைப் பற்றி.

மகேசன் படைப்பு மனித உடல்! எனினும், தேவ சிற்பியின் சிலை, முதுமை, நோய், எனும் ஆபத்துகளால் தீண்டப்பட்டு முடிவில் பிடிமண்ணாகிப்போகிறது!

அழகொழுகும் கண்கள் — ஓர் நாள் ஒளி இழந்து வெறும் குழிகளாகிக் காணப்படுகின்றன!

கெம்பீரம், தளர்ச்சியாகிவிடுகிறது.

குன்றெடுக்கும் தோள், குலைந்து போகிறது!

புன்னகை, எங்கோ மறைந்தே போய்விடுகிறது!

தேவ சிற்பியின் கருத்தோவியம் என்கிறார்கள், மனிதனை; ஆனால் அந்தச் சிலை, காலத்தால் தாக்கப்பட்டு, கூனி, குறுகி, குலைந்து குப்பையாகிவிடுகிறது.

ஆனால், இதோ மனிதன், சிற்பியாகிறான்—கல்லைச் செதுக்கிச் சிலை சமைக்கிறான் — காலத்தை வெல்கிறான்!

கெம்பீரம், கவர்ச்சி, ஒளி, எல்லாம், அப்படிஅப்படியே அமைந்துவிடுகின்றன!

தேவ சிற்பியின் 'தோல் பொம்மை' சுருங்கிப்போகிறது!

தன் 'கைவண்ணம்' காட்டிச் சமைத்தான் மனிதன். அந்தச்சிலை, 'இளமை அழகு' குன்றாத நிலையில், காலத்தை எதிர்த்துக்கொண்டு நிற்கிறது!

படைப்புத் தொழிலில், என்னிடம் பரமன் எங்ஙனம் போட்டியிட முடியும்; அவன் படைப்பு 'ஆறிலோ நூறிலோ' அழிகிறது, என்படைப்பு, காலத்தை வென்று நிற்கிறது!

சிற்பி சந்தனத்தேவன், மன்னனைப்பார்த்த பார்வையில் இந்த 'எண்ணமெல்லாம்' இருப்பது போலத் தோன்றிற்று!

காலை மாலை, மண்டலம் பலவற்றிலுமிருந்து, சிற்பிகள் வரப்போகிறார்கள் — சிற்றரசர்கள் வருகிறார்கள் — சீமான்களின் கூட்டம் ஏற்கனவே நிரம்பிவிட்டது.

சிற்பக்கலாவிற்பன்னர்கள் கண்டு மகிழத்தக்கது மட்டுமல்ல, சிற்பக்கலைக்கு ஓர்புதிய ஆசான் கிடைத்துவிட்டான் என்று போற்றத்தக்க முறையில் சிலை அமைந்துவிட்டது, என்று மன்னன் பாராட்டினான்!

சிந்தனை, ஓயாதஉழைப்பு, இவைகளால், உடலம் உருக்குலைந்து போயிருந்த நிலையில் இருந்தான் சிற்பி.

கருவுற்ற காலத்தில், மகப்பேறு எதிர்ப்பார்க்கும் தாயின், நிலை போன்றது, சிற்பிக்கு!

மழலை கேட்டது—முகம் மலராயிற்று—வேதனை என்றனர் விவரமறியாதவர்கள் அவள் கதறியபோது—விருந்து! என்றாள் தாய், குழந்தை வீறிட்டு அழுதபோது!

அதே நிலையில், சிற்பி இருந்தான்!

கல், சிலையாகிவிட்டது—கருத்து வடிவமெடுத்துவிட்டது!

தூக்கம் வராத இரவுகள் பல! நெற்றியிலே ஒரு வளைவு இருக்கிறது மன்னனுக்கு — ஆனால் அது சிந்தனையின்போது மட்டுமே தெரிகிறது.

சிந்தனை செய்யும்போது, முகம் சோபையற்று இருப்பதுண்டு பலருக்கு.

வேழமுகத்தாருக்கு, சிந்தனையின் போது, தனிச் 'சோபை' தெரிகிறது—கல்லிலே, இது அமைய வேண்டும். கருத்தில் அமைந்துவிட்டது கரத்திலே அதற்கான 'இலாவகம்' வரவேண்டும், எப்படி? எப்படி?

சிற்பி, இதுபோல, பலவற்றுக்குச் சிந்தித்திருக்கிறான்.

ஒரு தட்டு—சிறிதளவு செதுக்குவான்—ஒரு கீறல் ஏற்படுத்துவான்—சிறிது கிண்டிவிடுவான்—எதிரே போய் பார்த்துக்கொண்டே நிற்பான், பால் புளிப்பேறிவிடும், பழத்தைப் பறவைகள் கொத்திக்கொண்டு போய்விடும்!

பிருந்த கஷ்டத்துக்குப் பிறகு அவன், 'கலைச் செல்வத்தைப் பெற்றெடுத்தான்.

இனி, ஊரார் காணலாம், உற்றார் மகிழலாம்.

திறப்புவிழா, அவனுக்கு வெற்றி விழா!

மன்னன் சிலை நேர்த்தியாக அமைந்துவிட்டது என்று அமைச்சரும் ஆஸ்தான அலுவலர்களும் கூறினர். சிற்பிக்கு இனிப்பாகத் தான் இருந்தது ஒருகணம்—மறு கணமோ, அவர்கள் மன்னனைத் தான் பாராட்டுகிறார்கள்போல் தோன்றிற்று, மனதிலே ஓர் பசி எடுத்தது!

தங்கள் அழகு, அப்படியே தெரிகிறது, அரசே!

விரிந்த மார்பல்லவா தங்கட்கு; சிலை அதனால்தான் சோபிதமாக இருக்கிறது.

கண்களிலே உள்ள ஒளியைக் கவிவாணர்கள் பலர் கவிதை வடிவாக்கியுள்ளனர்-இவனோ கல்லில் அந்தக் கண்ணழகைக் காட்டியுள்ளான்!

கிடைத்த பொருள் நேர்த்தியானது—படைத்த முறையும் சிலாக்கியமானது!

மன்னனைப் புகழ்கிறார்கள்—இரண்டோர் புகழுரையை தனக்கும் வீசுகிறார்கள்.

சிற்பிகள் நாளைக்கு வருவர்—அவர்களால்தான், சிறந்த பாராட்டுரை கூறமுடியும்!-என்று எண்ணினான்—மறுகணமோ, "ஆனால்...... அவர்கள்......"

"கண் செதுக்க நாலு நாள் ஆகியிருக்கும்."

என்பார் ஒருவர்; இதற்கு ஏன் நாலுநாள், "நான் நரேந்திர பூபதியின் கண்களை நாலுமணி நேரத்திலே செதுக்கினேன்" என்பார்!

"தம்பி!" என்று சொந்தம் கொண்டாடி அழைத்து வேறொருவர் கேட்பார், "காதணி செதுக்கிய போது, மாலைவேளையோ?" என்று.

இங்ஙனம் ஒவ்வோர் சிற்பியும், சிற்பக்கலையில் தத்தமக்கு உள்ள அறிவுத்திறனை அறிவிக்கும் வகையிலே யன்றோ, பாராட்டுரைகளை அமைப்பர், என்ற எண்ணம் உண்டாயிற்று!

அரசர், அகமகிழ்கிறார்! ஆனால் கலைத்திறமை கண்டா, அல்லது காலத்தை வெல்லும் வகையில் கல்லுருவம் கிடைத்துவிட்டது, இனி வாழையடி வாழையாக வருபவர்கள், நமது அருமையை அறிவர் என்ற எண்ணத்தினாலா?

அரசியார்? மகிழத்தான் செய்வார்கள்! ஆனால், கல்லுருவம், கண்ணாளா! ஊராருக்கு, எனக்கு, இந்தப் பேசும் ஓவியம் என்று கொஞ்சிட முனைவார்களே தவிர, என் 'கைத்திறனை'யா புகழ்ந்தபடி இருப்பார்கள் என்று எண்ணினான்; விவரிக்க முடியாததோர் வருத்தம் அவனைக் கப்பிக் கொண்டது.

வருத்தம் குறையவும், வெப்பம் தாக்காதிருக்கவும், மாலை முழுவதும், மலர்ச் சோலைகளாகச் சுற்றினான்—நீரூற்றுகளை நாடினான்—எதைக் காணும்போதும் அவனுக்கு, எழில் எங்கும் இருக்கிறது! அதோ மலரும் அரும்பும் ஒரே கொடியில்! இதோ பெடையிடம் கொஞ்சும் சேவல்! ஆஹா! அந்த மந்தியின் பார்வையில்தான் எவ்வளவு குறும்பு!

எங்கும் எழிலோவியங்கள் காண்கிறோம்! செதுக்காத சிற்பங்கள்! உளியில்லை, உறக்கமற்ற இரவுகளில்லை, எனினும் கலைக்குக் கருத்தளிக்கும் ஓவியங்கள் உள்ளன! என் 'கைத்திறன்' எம்மாத்திரம்! — என்றெண்ணிக் கவலையிலாழ்ந்தான்!

இருள் மெள்ளமெள்ள கப்பிக் கொண்டது—என்றையத்தினம் இணையற்ற மகிழ்ச்சி இருக்க வேண்டுமோ, அன்று அவனுக்கு விவரிக்க முடியாத ஓர் வருத்தம்!

பாறையில் படுத்தான் உறங்கி விட்டான்.

கனவில், தாயும் தந்தையும் வந்தனர் — தாய் கடிந்துகொள்கிறாள். காடு கழனியைக் கவனிக்காமல், கல்லை உடைப்பதும் காலத்தை ஓட்டுவதுமாக இருக்கிறாயே என்று—தகப்பன், சிறு பிரம்புகொண்டே அடிக்கிறான், பெரிய சிற்பியோ! ச்சீ! பஞ்சைப் பயல் மகனே! பிழைக்கும் வழியைப் பாரடா! என்று மிரட்டுகிறார்.

கண்காணாத் தேசம் சென்றுவிட்டனர்—மகன் ஓர் உதவாக்கரை என்று சபித்துவிட்டு.

என்ன ஆனார்களோ! தெரியாது!

இவனோ 'சிற்பி'யாகிவிட்டான்—புகழ்பரவி, அவர்கள் இருக்குமிடம் சேருமோ, அல்லது, எந்தச் சேதியும் தேவையற்ற நிலையை அவர்கள் அடைந்துவிட்டார்களோ, யார் கண்டார்கள்!

*

பாவம், களைத்துப்போய் விட்டான்,—என்று முதியவர் கூறினார்.

வீடு வாசல் இல்லையா, இப்படிக் காடு மேடு தங்கிட, என்னகாரணம் —என்றாள் அவர்பேத்தி.

சிற்பி விழித்துக்கொண்டான்.

ஐயா, தாங்கள் யார்...என்று கேட்டபடி, வெட்கித் தலைகுனிந்த வண்ணம், தன் வேல்விழியைப் பக்கவாட்டாகப் பாய்ச்சியபடி நின்ற பாவையைக் கவனித்து விட்டு, "இது தங்கள் தோட்டமா? நான் அனுமதி இல்லாமல் நுழைந்துவிட்டேனா? களைப்பு—தூங்கிவிட்டேன்"—என்று குளறினான் — குமாரி 'கலகல'வெனச் சிரித்தேவிட்டாள்.

"சும்மாகிட குட்டி, தம்பி, யாரு நீ? இந்தப்பக்கம், பொழுது சாய்ந்த பிறகு புலி கூட உலாவுமே, இங்கே படுத்துத் தூங்கலாமா? வா, வா என்னோடே அரண்மனை அருகாமையில் இருக்கு" என்று கூறி, அழைத்துச் சென்றார்.

அரண்மனை சமயற்காரர்களிடம் 'அஞ்சும் மூணும்' அடுக்காகக் கொடுத்தும், ஏன் இப்படிச் சுவையாகச் சமைத்திடத் தெரிவதில்லை என்று எண்ணினான்—அந்த மங்கையின் கரம்பட்ட துவையலும் பொரியலும், அவியலும், அப்படிச் சுவைத்தது, அவனுக்கு.

ஏதேதோ பேசவேண்டுமென்று எண்ணினான் — ஆனால் ஏனோ அந்த மங்கையின் பார்வை அவன் 'நாவை'க் கட்டிப்போட்டுவிட்டது.

தாத்தா!......ஓ! தாத்தா........ என்று கேட்டுக்கொண்டே முக்காடிட்ட உருவம் உள்ளே நுழைந்தது.

கே:- கடவுளைத் திரும்பிக்கூடப் பாராதவர்கள் முதலாளியைக் கும்பிடுவது ஏன்?

பதி:- முதலாளி படியளப்பதால்!

(ஈழகேசரி)

தாத்தாவும் தையலும் வரவேற்றனர்; வந்த பெண், சிற்பியைக் கண்டதும் சிலையாகச் சமைந்துவிட்டாள்; அவனும் அவளைக் கண்டு ஆச்சரியப்பட்டான். அவள், அரசனுடைய தங்கை, விதவை.

"கொழந்தே...," — என்றான் கிழவன்—உஸ், பேசாதே, என்று எச்சரிக்கை செய்தாள் அரச குடும்ப அணங்கு.

"இவர் எப்படி உங்களுக்குத் தெரியும்?"—அவள் கேட்கிறாள்.

"காட்டில் கண்டோம்—வழி தவறி வந்தான் இந்த இளைஞன்"—கிழவன் சொன்னான்.

"வரவேண்டிய இடத்துக்குத் தான் சிற்பி வந்து சேர்ந்திருக்கிறார்" என்று கேலியாகப் பேசிவிட்டு, அவள், கிழவனின் பேத்தியைப் பார்த்துச் சிரித்தாள்.

"தாத்தா, பாலில் கலந்து பருகியதும், பிணமாகிக் கீழே விழ வேண்டும்—அப்படிப்பட்ட 'விஷம்' உடனே தேவை" என்றாள் அரச குடும்ப அழகி, சிற்பி திடுக்கிட்டுப் போனான்.

"நல்ல வாய்ப்பை இழந்து விட்டீரய்யா சிற்பியாரே, நாலு நாளைக்கு முன்பு தெரிந்திருந்தால்கூட, என்னையும் கல்லுருவமாக்கி இருக்கலாம். நாளைக்கு—அல்லது நாளை நள்ளிரவுக்குமேல் நான் இருக்க மாட்டேன்"—என்று கூறிக் கொண்டே இருக்கையில் அவளுக்குக் கண்களில் நீர் 'பொல பொல' வென உதிர்ந்தது.

"தம்பி, என்ன இது"

"எனக்கொன்றும் தெரியாதே"

"தாத்தா, இவர் சிற்பி—நிபுணர்—என் அண்ணனுடைய சிலையை அழகாகச் சமைத்திருக்கிறார்"

"ஆமாம், அம்மணி அதனால் என்ன..."

"அதனால் என்னவா,...அந்தக் கருணை பொழியும் முகம் எல்லோருக்கும் தெரியுமல்லவா, உமது கலைத்திறனால், என் அண்ணனுடைய புகழ்பரவும்— உமக்கும் தான்..."

"அம்மணி, தங்கள் வார்த்தையிலே கேலி தொனிக்கிறது...',

"ஐயா, கல்லுளிச்சத்தத்தை மட்டுமே கேட்டுக் கேட்டுப் பழகிப் போனதால், என் வேதனை உமக்குக் காதில் படவில்லை; கண்ணீருமா தெரியவில்லை. கலைத்திறனைக் கொண்டு, யாருடைய சிலையைச் சமைத்திருக்கிறீர், தெரியுமா... என் அண்ணன் சிலையை. என் அண்ணன் யார்? நாட்டுக்கு அரசன், போரில் புலி, கலாரசிகன், மக்களிடம் மதிப்புப் பெற்றவன், மண்டலம் பலவற்றிலே, செல்வாக்குப் பெற்றவன்......"

"ஆமாம், அம்மணி, ஆமாம்..."

"ஆனால், என் அண்ணன் ஒரு குருடன்...!"

"அம்மணி...!"

"ஆமய்யா சிற்பியாரே! விழி திறந்திருக்கிறது, ஆனால் குருடன்! எல்லாருக்கும் அல்ல! அவரால், உன் சிலையைக் காணமுடியும், கப்பப்பொருளைக் காண முடிகிறது, கோட்டை கொத்தளத்தை, பொக்கிஷத்தை பூஜாமாடத்தை—எல்லாவற்றையும் பார்க்க முடிகிறது கல்லுடன் காலமெல்லாம் பழகும் சிற்பியே! என்னையும் பார்க்க முடிகிறது, ஆனால் என் கருவில் வளரும் சிசுவைக் காண முடியாத குருடன் அவர்......"

"இதென்ன வேதனை, அம்மா!"

"நான் விதவை, ஐயா! விதவை! என் குற்றமல்ல! என் அண்ணன், தன் 'பட்டம்' பறிக்கப்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக, சதிகாரர்களின் தலைவனாக இருந்த ஒரு கிழச் சீமானுக்கு என்னைத் 'தாரை' வார்த்துக் கொடுத்தார். ஆமாம், கோலாகலமான திருமண விழா! என் கண்கள் குளமாயின, சீமான்கள் குடித்துக் கூத்தாடினர். என் அண்ணன், இனித், தன் பதவிக்கு ஆபத்து இல்லை என்றகளிப்புடன், அண்ணியுடன் பால்வண்ண நிலவில், பளிங்கு மாடியில், உலவினான்—நான் பால் நுரைபோன்ற தலையுடன் தத்திநடக்கும் காமாந்தகாரக் கிழவனிடம் சிக்கினேன் — அவன் ஆஹா! என்றான். என் "ஐயோ!"கூட அவனுக்கு, கீதமாக இருந்தது!

கிழவனுக்கு மனைவியாக, எப்படி இருப்பது என்பதை நான் தெரிந்துகொள்ளச் சிலகாலம் பிடித்தது—அதற்குள் என் காதலர், களத்திலிருந்து திரும்பினார்—யார் அவர்...உமக்கு உதவியாக அமர்த்தப்பட்டிருந்தாரே...

"கதிரவன்...!"

"ஆம், என் இதயத் தாமரையை மலரும் படி செய்தவர், அரியாசனம் கிடைக்காததால் வெறும் போர்வீரனாக உள்ளவர்......அவருடைய 'காதற்கனி'...யைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன்......"

"விதவையான பிறகா...?"

"கலைமட்டுமறிந்த ஆடவனே, எனக்கு எப்போது திருமணமாயிற்று, விதவையாக .....கிழவனுக்குக் கலியாணம் நடந்தது, அவன் பிறகு இறந்தான்...கருணை பொழியும் கண்களைச் செதுக்கி இருக்கிறாயே, நாளைக்குக் காணப் போகிறார்களல்லவா, காவலர்கள், நாவலர்கள்........அந்தக் கண்களிலே ஒரு துளி கருணை பிறக்கவில்லை, நான் காலில் வீழ்ந்தேன் ......கண்ணீர் பொழிந்தேன்...கருவில் வளரும் செல்வத்தைக் கவனப்படுத்தினேன்........மறுமணத்துக்கு இசைவு தரச்சொன்னேன் ......இந்த மண்டலத்துக்கு அதனால் இழுக்கு நேரிட்டுவிடுமென்றால், எம்மை 'ஓடிவிட' அனுமதி தாரும், உமது 'ஓநாய்களை' அனுப்பி விரட்டிப் பிடிக்காமலிருந்தால் போதும், என்று மன்றாடினேன்..."

"என்ன சொன்னார், மன்னர்! அம்மணி, என்ன சொன்னார் அரசர்"

"அரசரா, அரச நீதி பேசினார்... என் கதிரவனைச் சிறையில் தள்ளிவிட்டார்...நாளை மறுநாளோ, நாலு நாளைக்குப் பிறகோ, விழா முடிந்ததும், சிரச்சேதமாம்..."

"என்ன அநியாயம்......என்ன அக்ரமம்..."

"என்ன அழகான சிலை—எத்துணை கெம்பீரம். என்று நாளையத்தினம் புகழப்போகிறார்கள்—நான் இன்றிரவு பிணமாக வேண்டும்..."

"தங்கையே, பிணமாக வேண்டியதில்லை. பிழை செய்த நான், கழுவாய் தேடுவதைக் கண்டு களித்திட வேண்டுகிறேன்...காதலனை மீட்டிடவும், கடிமணம் புரிந்திடவும் வழி நான் கண்டளிக்கிறேன்...தங்கள், உயிர் துறக்கும் முடிவை மட்டும், மாற்றிக்கொள்ளத் தான் வேண்டும்......"

"ஆமாம், அக்கா, அவர் வார்த்தையை நம்புங்கள்..."

"குழந்தாய், தற்கொலை பெரிய பாபமம்மா......"

"தற்கொலை கூடாது என்பது மட்டுமல்ல; கருவில் உள்ள குழவி..."

"ஆமாம்...அது எல்லாவற்றையும்விட அக்ரமம்"

"சத்தியம் செய்யுங்கள் அம்மணி..."

"நானா? என்னவென்று?"

"தற்கொலை செய்துகொள்வதில்லை என்று"

"அக்கா, அவரை நம்புங்கள்"

"ஆகட்டுமடி மருதம்," இந்த உரையாடலுக்குப் பிறகு, சிற்பி, வேகமாக ஊர்திரும்பினான்.

அரசன், நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

உளிச்சத்தம்! ஆள் சென்றான்; சிற்பி அவனிடம், மிக முக்கியமான 'வேலைப்பாடு' அமைக்க மறந்துவிட்டதாகவும், விடிவதற்குள் அதனைச் செய்துமுடிப்பதாகவும் கூறி அனுப்பிவிட்டான்.

*

"மன்னர்பிரான் வேழமுகத்தாருடைய உருவச் சிலையைத் திறந்து வைக்கும் பாக்கியம், எனக்குக் கிடைத்ததுபற்றி நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மன்னர்களில் மாணிக்கம் எனத் தக்க மாண்புள்ள நம் வேழ முகத்தாரின் சிலையை, கலை மன்னர் என்று போற்றத்தகும் சிற்பி சந்தனத்தேவன் சமைத்திருக்கிறார்.

அந்த உருவச்சிலை, கலையின் நேர்த்தியை எடுத்துக் காட்டுவதுடன், மன்னர்கள் எங்ஙனம் ஆட்சி நடத்தி மக்களுக்கு இதம் செய்யவேண்டும் என்ற மாண்பினை எடுத்துக்காட்டுவதாக இருக்கும் என்பது திண்ணம்—என்று சொற்பொழிவாற்றிவிட்டு, சோமேசர் மடாலயத் தலைவர் சொர்ணலிங்க குரு, திரைச்சீலையைத் திறந்தார்—மண்டலாதிபதிகள், மந்திரி பிரதானியர், சிற்பிகள் அனைவரும், கரகோஷம் செய்தபடி, வேந்தர் வேழமுகத்தார் வாழ்க, என்று வாழ்த்தொலி கூறியவண்ணம், சிலையைப் பார்த்தனர்—இரு கண்களும் குருடாகச் சிலை காணப்பட்டது. உளியினால் ஆழமாக இரு குழிகளாக்கப் பட்டுவிட்டிருந்தன. அனைவரும் பதறினர், அடடா, ஐயகோ யார் செய்த வேலை, என்ன போக்கிரித்தனம், எங்கே சிற்பி,—இதென்ன கோலம்,—என்று பலர்பலவிதமாகக் கூவினர்.

சிற்பி சந்தனத்தேவன் பதறாமல், "ஏன் பதைக்கிறீர்கள், அரசன், குருடன், அதை அறிந்த பிறகுதான், சிலையில் நான், இந்தத் 'திருத்தம்' செய்தேன்..." என்றான் அச்சமின்றி.

பித்தம் பிடித்துவிட்டதோ—என்று பெருங்கூச்சலிட்டனர் அமைச்சர்கள்.

பிடித்துக் கட்டுங்கள் கம்பத்தில், என்றான் மன்னன்.

"வேண்டாம் வேந்தே, கதிரவன் இருக்கும் காராக்கிரகத்தில் என்னையும் கொண்டுபோய்த் தள்ளுங்கள்—பிறகு, முதலில், தங்கள் சிலையில் நான் செய்த திருத்தம் தவறு, என்று கேளுங்கள், நான் பதிலளிக்கிறேன். நான் கலைஞன்—கூலிக்காரனல்ல. கலை, கற்பனையை ஏற்றுக்கொள்வதுதான், ஆனால் உண்மையை மறைப்பது கலையாகாது. நாள் கணக்கில் மாதக் கணக்கில், நான் சிலை செதுக்கிக்கொண்டிருந்தபோதெல்லாம், குருடனாகத்தான் இருந்தேன்—அதனால்தான் தாங்கள் குருடர் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை! நேற்று இரவுதான் எனக்குக் கண் திறந்தது, தாங்கள் குருடர் என்பது தெரிந்தது.

கசை அடி கொடுங்கள் கீழே சுருண்டுவிழும் வரையில்......மன்னன் கட்டளையிட்டான்.

'கட்டாரி கொடுங்கள் எனக்கு —நான் இறந்த பிறகு கசையடி விழா நடத்தட்டும்—என்று கூறியபடி, மன்னன் தங்கை, மன்றம் நுழைந்தாள்.

சிற்பியையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தனர், மன்றத்தினர் சந்தேகத்தோடு.

"அவள் என் தங்கை. அறிவிலிகளே, அவள் என் தங்கை, அவள் விதவை, விவேகமற்றவரே, விதவை. ஆனால் 'தாய்' ஆகும் நிலையில் தத்தளிக்கும் துர்ப்பாக்கியவதி......!

மன்றம் பரபரப்பு அடைந்தது மன்னன் மன்றத்தைக்கலைத்துவிட எவ்வளவோ முயன்றான்—முடியவில்லை—படைவரிசையினரே, சிற்பியின் பேச்சைக்கேட்கக் கூடிவிட்டனர்.

"ஆம், நான் குருடன்தான்,...சமுகக்கட்டுப்பாடு, போலிக்கௌரவம் என்பவைகள் என்கண்களைக் குருடாக்கி விட்டன—சந்தனத்தேவன், என்னைக்குருடனாகச் சமைத்தது முற்றிலும் பொருத்தமே...என்று மனம் கசிந்து கூறினான் மன்னன்.

காலடிவீழ்ந்த தங்கையின் கண்ணீரைத் துடைத்தான்—கதிரவனுக்கு உன்னைக்கடிமணம் செய்விக்கிறேன், இன்றே, இங்கேயே, இப்போதே...என்று கூறினான்.

விழா மன்றம், மணமன்றமாகி விட்டது.

சிற்றுளி எங்கே, எங்கே என்சிற்றுளி, என்று களிப்புடன் கூவினான் சந்தனத்தேவன்—கையாள் கொடுத்த சிற்றுளியைக் கொண்டு சிலையில் கண் அருகே சிலவினாடி 'வேலை' செய்து, புதிதாக அங்கு செதுக்கி அமைத்திருந்த குருட்டு விழியைப் பெயர்த்தெடுத்தான்—சிலையின் சோபிதம் குன்றுமல் விளங்கிற்று. கண், ஒளி விட்டது, கண்ணீர் மல்கிய நிலையில், மன்னன் சிற்பியைக்கட்டித்தழுவிக் கொண்டு, கண் திறந்தது,-என்றான் இஃதன்றோ, உண்மையான திறப்பு விழா, என்று கூறிமகிழ்ந்தனர் மன்றத்தினர். ★

காமராஜரே!

அரசாளும் மகிபராம் நிதியமைச்சர்
அவசரச் செயலாலே ஏழை மக்கள்
எலும்பொடித்துத் தந்தவரிப் பொருள்கள் ஐயோ!
இரண்டு லட்சம் அழியக் கண்டும்
கலும்வின்றிச் சகசமெனக் கூறு கின்றார்
கடமைசெயப் பொறுப்பேற்ற அமைச்சர்! நீரோ
குலுங்காது காரேறிச் சுற்று கின்றீர்
குடியாட்சி முறையிதுவோ கூறும் ஐயா!

"வளவன்"

4-ம் பக்க தொடர்ச்சி

அடையவன்றே, கங்கணம் கட்டிக்கொண்டு பாடுபடுகிருர்; அவரை எப்படி, பதவிப் பசையைக் காட்டியோ, பணுசையை ஊட்டியோ, வளைக்கமுடியும்? கொள்கை, கொள்கை,—என்று முழக்கும் வீரரல்லவோ, அவர்? அதனுல், பிரெஞ்சாதிக்கம், மிரட்சியோடு பார்க்க ஆரம்பித்தது! கௌர்அமர் ஹபிப் பர்க்யூபாவின் புதிய கட்சி, நாட்டின் மூலைகளிலெல்லாம் பரவத்துவங்கி, "ஒழிக பிரெஞ்சு ஆதிக்கம், டுனீஷியா டுனீஷியருக்கே," என்று முழக்க ஆரம்பித்ததும், பயம் கொள்ளலாயிற்று. அதிலும், பர்க்யூபா, அழகாகப் பேசும் ஆற்றல் கொண்டவர். அதுபோலவே, எழுதும் திறமையும்,—எனவே, 'இதேதடா, புதிய ஆபத்து', என்று மிரண்ட பிரெஞ்சு ஆதிக்கம் அவரை அவரது கமிட்டியையும் கைதுசெய்து, பாலைவனத்துக்கு அனுப்பியது. அன்றுதான், பர்க்யூபாவின் இலட்சிய முழக்கத்துக்கு முதல் 'பரிசு' கிடைத்தது. மக்களின் மனதிலும், இடம் பெறலானுர்.

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து விடுதலை—சிறை—விடுதலை—சிறை, என்றே காலந்தள்ள நேர்ந்தது. கடந்த உலகப் பெரும்போரின்போது, இவர் பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்க்கிறவர் என்பதால், பிரெஞ்சு சர்க்காரின் சிறை விருந்தினராக இருந்த இவரை, பிரான்சை வீழ்த்திய ஹிட்லரின் படை இத்தாலியரிடம் அளித்தது. பிரான்சுக்கு எதிர்ப்பாளராக இருப்பார் என்றெண்ணிய இத்தாலியர், இவரை, டுனீஷியாவுக்கு அனுப்பினர். அந்தச் சமயத்தில், டுனீஷியாவைப் பிடிக்க நேசப்படைகள் போர்தொடங்கவே, பர்க்யூபாவைத் தூக்கில் தொங்கவிட்டுவிடுவதெனப் பிரெஞ்சுக்காரர்கள் முடிவு செய்தனராம், 1940-ல். அந்தச் சமயமென அமெரிக்கர் வந்து சேர்ந்ததால், தப்பிஞராம்—1945 வரை, டுனீஷியாவிலேயே, பாதுகாப்புக் கைதியைப்போல வைக்கப்பட்டிருந்த அவர், மாறுவேடம் புனைந்து, அங்கிருந்து தப்பி, அருகிலிருக்கும் எகிப்து நாட்டுக்குச் சென்றுர். எகிப்தின் தலைநகரான, கெய்ரோவிலிருந்தபடி, டுனீஷியச் சுதந்திரக் கோரிக்கைக்கான ஆதரவைத் திரட்டலானுர். வெளிநாட்டிலும், ஆதரவு பெறவேண்டுமென்பதற்காக, இந்தோசீனு, அமெரிக்கா, பாகிஸ்தான் முதலிய இடங்களுக்கு 1947-ல் சென்றிருக்கிருர். அப்போது, இந்தியாவுக்கும் வந்தாராம். 1949-முதல் டுனீஷியாவிலிருந்தபடி, விடுதலைக் கொள்கையைப் பரப்பும் பணியிலீடுபட்டிருந்தார்—எங்கும் சங்கங்கள். எல்லோரது இதயத்திலும் சுதந்திர ஒலி பரப்பியவண்ணம், பர்க்யூபா, பவனி வந்துகொண்டிருந்தார். இதைக் கண்ட பிரெஞ்சு சர்க்கார் அவரைக் கைதுசெய்து, 1954-ஜூலை வரையில், சிறையிலே உழன்ற அவரை, கப்பலேற்றி பிரான்சுக்குக்கொண்டு சென்றனர். அப்போதும், பாரிசுக்குள் நுழையவிட முடியாதென்று தடை இருந்ததாம். இப்படி அடக்கு முறைகளால், பர்க்யூபாவையும் அவரது அரசியல் இயக்கத்தையும் அழித்துவிடலாம் என்று பிரஞ்சு ஆதிக்கம் கனவு கண்டதே ஒழிய, "ஏனிந்த ஆள் இப்படி அலைகிருன்? எந்தக் காரணத்துக்காக படாதபாடுபடுகிருன்? கூப்பிட்டுப் பேசுவோம். குறைகளையாவது கேட்டுத் தெரிந்துகொள்வோம்" என்று ஒருமுறைகூட எண்ணவில்லை, பிரான்ஸ். எப்படியெண்ணும்?

பர்க்யூபாவா? செச்சே, எப்போது பார்த்தாலும் இந்தப் பாமரர்களைச் சேர்த்துக்கொண்டு திரிகிருனே. அந்த ஆள்தானே.

கொஞ்சமாவது பெரிய மனுஷத்தன்மை உண்டா? எல்லாம், சிறுபிள்ளைகள். மாணவர்களும், வாலிபர்களும்தானே அவன் கட்சியிலிருக்கிருர்களாம்.

பழைய டெஸ்டார், ஆகுமா? அங்கே எவ்வளவு பெரிய வியாபாரிகள், சீமான்கள். இவனைப்போலவா, ஊர் ஊருக்கு அலைந்துகொண்டும், கிடைக்கிற 'நிதி'யை விரயம் செய்துகொண்டும் இருக்கிருர்கள்.

இப்படிக் கிண்டலும் கேலியும் பேசினரே தவிர, பர்க்யூபாவின் இதயம் ஏந்தியிருக்கும் இலட்சியத்தின் ஆழத்தை எண்ணிப்பார்க்கவில்லை. அந்த இலட்சியத்தை அடைய, அவர்பக்கம், மாபெரும் படை திரளலாயிற்று. இவ்வளவு பெரிய செல்வாக்கு, புதுடெஸ்டாருக்குத் திரள ஆரம்பித்ததும், நாட்டிலிருக்கும் "பெரியவர்கள்" எப்படிப்பேச ஆரம்பித்தார்களாம், தெரியுமா?

பரவாயில்லை,"ஐயா, எப்படியோ, இவ்வளவு பெரிய செல்வாக்கு வந்துவிட்டது.

"செல்வாக்கு வந்து என்னங்க பிரயோசனம்? செக்குமாடுபோல, இன்னும் சுற்றுகிருன். ஒரு விஷயம் என்ருல், ஒரு அறிக்கை—இரண்டுமுறை விஷய விளக்கம் தந்துவிட்டு விட்டிலிருப்பது தலைவனுக்கு அழகா? எதற்கெடுத்தாலும் தானேபோய் நின்றுகொண்டிருப்பது நாகரீகமா!"

இப்படிப் பேச ஆரம்பித்தார்களாம், அவனைப்பற்றி. அவனே, அவர்களை அலட்சியமாகப் பார்த்தான். "தலைவன் என்பதற்குக்கூட 'ஸ்கேல்' உண்டுபோலும், அளவெடுக்க! என் விருப்பப்படி பிறரும் பின்வர வேண்டுமென்று நான் ஆசைப்படும்போது, நானே அவர்களுக்கு உதாரணமாயிருக்க விரும்புகிறேன்; உட்கார்ந்துகொண்டு, அவர்களை ஊக்கிவிட்டுவிட்டு வேடிக்கை பார்க்கும் செயல் எனக்குப் பிடிக்காது" என்று தெளிவாகத் தெரிவிப்பானும். இந்தச் செயலே, அவன் பக்கம் ஏராளமான மக்களை இழுத்ததாம். பிறர் தன்னைப் பார்க்க வந்திருக்கிருர்கள், இயக்க வளர்ச்சியைப் பற்றி விவாதிக்க விரும்புகிருர்கள் என்ருல், அவர்கள் எப்படிப்பட்டவர்களாஞலும் அழைத்துப் பேசுவானும், தன்னுடைய தோழர்கள் கூடிவிட்டால், அவர்களுக்குத்தன் கையாலேயே சமைத்துச் சாப்பாடு போடுவதில் அலாதிப் பிரியமாம்.பெரீய வக்கீல் ஒருபோது — இப்போதோ, ஒரு இயக்கத்தின் தலைவன். என்ருலும் தன் கொள்கைக்காகப் பாடுபடுவோரிடம் அவன் காட்டிடும் குடும்பப் பாசமும் பற்றும் மிகமிக அதிகம்?

அதனுலேயே, புது டெஸ்டார், மிகப்பெரிய விடுதலை இயக்கமாக உருவெடுத்துவிட்டது. அப்படி வளர்ந்த பிறகு "அவன் என்ன பெரிய மனிதனே. அவனைச் சேர்ந்தோர் நடத்துவதென்ன அரசியல் கட்சியோ. அவனை மதித்துப் பேசுவோமோ? எங்கள் புகழ் என்ன சாமான்யமா. அமெரிக்கா ஒரு பக்கம், ரஷ்யா இன்னொரு பக்கம், பிரிட்டிஷ் பிரதிநிதி அருகே; அவர்களுடன் அமர்ந்திருக்கும் நாலு வல்லரசுகளில் ஒன்றன்றே எமது

அதிசயம்

"இந்துஸ்தான் விமானத்தயாரிப்புச்சாலையில் மானேஜிங் டைரக்டராகயிருப்பவருக்கு விமானத் துறை பற்றி எவ்விதப்பயிற்சியும் கிடையாதாமே, உண்மையா?" என்று டில்லி பார்லிமெண்டில் ஜயசூர்யா என்பவர் கேட்டார். தக்க பதில் கிடைக்கவில்லை.

பிரான்சு. இதுகளை அழைத்தா பேசுவோம் நாங்கள்?" என்று வீம்பு பேசிக்கொண்டிருக்க முடியுமா?

எரிமலை புகைய ஆரம்பித்து, விட்டதே—டுனிஷியன் மண்ணில், எங்குநோக்கினும் கிளர்ச்சிகள், படை எதிர்த்துப் பாய்ந்தால், விடுதலை வீரர்களும், பாய்கின்றனர். அடிதடி, குண்டுதுளைத்தல், நாடு, கலவரப் பூமியாகிவிட்டது.

நிறுத்த முடியவில்லை.

கட்டளையிட்டால், நிபந்தனை கேட்கின்றனர்.

ஒழிக பிரெஞ்சாதிக்கம் எனும் முழக்கம் எங்கும்.

என்னசெய்து?—என்று பிரான்ஸ் கலங்கலாயிற்று.

அதன் காரணமாக பிரான்சின் புதுப்பிரதமராகப் பதவியேற்ற பாரே 1955 ஏப்ரல் திங்கள் 22-ந் தேதி அழைப்பு அனுப்பினர்.

எந்தபர்க்யூபாவைச் சந்தித்துப் பேசுவது அவமானம் என்று கருதியதோ அதே, பெர் அமர் ஹபீப் பர்க்யூபாவை அழைத்தது பிரான்ஸ்.

என்னவேண்டும்?—என்று கேட்பதற்காக, அனுப்பப்பட்டது, அந்த அழைப்பு.

பர்க்யூபா, போனர், பூரிப்புடன், அவருடைய இயக்கத்தவர்கள் மகிழ்ச்சியுடன் வழியனுப்பினர்.

சென்றார்—டுனிஷியா டுனிஷியருக்காக வேண்டும்,—எனக்கேட்டார். அவர் கோரிக்கை வெற்றிபெற்று விட்டது, டுனிஷியா, புதுஅரசு அமைத்து விட்டது, அதன் தலைவர் இப்போது, பர்க்யூபாதான்.

தலைவராகஇருக்க பர்க்யூபாவைக் கேட்டதும், "என் இலட்சியம் பூர்த்தியாகி விட்டது, டுனிஷியாவுக்கு சுதந்திரம் வேண்டுமென்பதே என் கோரிக்கை. நான் அரசாளும் ஆசைகொண்டவனல்ல" என்றாராம். எனினும், எல்லோரும், அவரையே அரசுத்தலைவராக ஆக்கியுள்ளார்கள். அந்த அரிய வீரனல், விரைவில் டுனிஷியா, தலைநிமிர்ந்து நடைபோடும் என உலகம் எதிர்பார்க்கிறது.

★

கூட்டம் முடிந்ததும்!

[காதால் கேட்டவை]

"அடடா, என்ன ஆனந்தத்தோடு, மாலையைப் போடுகிருர், பார்த்தியா? கூட்டச் செலவுக்கே ரூபாய் ஆயிரம் கொடுத்தாராமே"

"கையிலே வைரமோதிரம் ஜொலிக்க அதோ நிற்கிருரே, அவர்தானே? ஏம்பா, செலவு செய்யமாட்டார். போனமாதம், நிலத்திலே வேலைசெய்யறவங்க கூலி போதலேன்னு கேட்டதும், போலீசாரை அழைச்சிவந்து, மிரட்டிய பிரபு அல்லவா? தனக்கு உதவிய சர்க்காருக்காக இது கூடச் செய்யலேன்னு, என்ன அப்பா, பிரயோஜனம்"

*

"அட, இந்த ஆளுக்குப் பார்த்தியா, காங்கிரசுமேலே, எவ்வளவு பக்திவந்துட்டுது"

"ஏம்பா, வராது? முனிசிபல் தேர்தலிலே, காங்கிரஸ் டிக்கெட்டில் அல்லவா, நிற்கிருர்"

"நேரு வருகைக்காக வீதியெல்லாம் தோரணம்—கொடிகட்டியதே அவர்தானுமே?"

"எல்லாம் பிசினஸ்தாம்பா, பல ஆயிரம் ரூபாய் செலவழித்தாலும், கிடைக்காத பிரசாரம் அல்லவா கிட்டுகிறது. நேருவுக்கு அளித்த பொன்னுடை, பூச்சக்கரக் குடை ஆகியவைகளைக் காட்டி வேட்டையாடமாட்டாரா, ஓட்டுகளை?"

*

"பார்டா, தம்பி, பார். ஊர்ப்பணத்தை வேட்டுவிட்டு, சேர்மனுயிருக்கிறோம்கிற எண்ணத்திலே, தண்ணீர்க் குழாய்க்குத் தன் பேரையே வைக்கவேணும்னு ஜகஜ்ஜாலமெலாம் செய்தவரைப் பார். எவ்வளவு, சந்தோஷத்தோடு, வரவேற்புப் பத்திரத்தைத் தூக்கிக்கிட்டுப் போருர்?"

"இருக்காதா? தான் செய்த தவறுகளுக்கெல்லாம், இது ஒண்ணுதானே, சான்சு. நாளைக்குச் சேர்மன் எலக்ஷன் வரும்போது, நேருஜிக்கு வரவேற்பு அளித்த கமிட்டிக்கே நான்தானே தலைவனுயிருந்தேன்னு சொல்லி மத்தவங்க வாயை மூடலாமேல்லியோ?"

"அதுவா, காரணம்"

"பணக்காரன் குடுமி சும்மா ஆடாதே"

*

"காமராஜைப் பார்த்தியா? கன குஷியா, கம்பீரமாப் போகிறதே!"

"ஆமாம், பக்கத்திலேயிருப்பது நேரு இல்லியா—அதனல்."

"அதுவா, மகிழ்ச்சிக்குக் காரணம்?"

"ஆமாம், "பாருங்க, பண்டிட்ஜி-நான், ஒரு தொண்டன், முதல் மந்திரியா வந்ததாலே, தலைவரான உங்களுக்குஇவ்வளவுவிமரிசையாக எல்லா ஏற்பாடும் செஞ்சிருக்கேன். இப்ப, சொல்லுங்கோ, நான் தேவையா, இல்லே, ராஜாஜியா? நீங்க வந்தப்ப அவர் செஞ்ச ஏற்பாடுகளையெல்லாம், பஞ்சுபஞ்சாக் கிட்டேன், பார்த்தீங்களா?" என்கிற ஆனந்தம். வேறென்ன?"

*

'அதெல்லாம், சரி. இந்தியப் பிரதமர் வந்தார், இவர்கள் ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு காரணத்தை மனதிலே வைத்துக்கொண்டு எல்லாம் செய்தார்கள். ஆனல், இந்த இரண்டுபேருக்கும் என்ன இருக்கும், மனதிலே?"

"எந்த இரண்டுபேருக்கும்?"

"அதாம்பா, அதோ, நேரு இங்கிலீஷிலே பேசறதை மொழிபெயர்க்கிருரே ஒ வி. அழகேசன், அவருக்கும்; இதோ, சிரிச்சுகிட்டு நிற்கிருரே, டி. டி. கிருஷ்ணமாச்சாரி, டில்லி வியாபார மந்திரி, அவருக்கும்; ஓடோடியும் இங்குவர என்ன காரணம்?"

"ஏன், அப்படிக் கேட்கிறே? அவுங்க, வரக்கூடாதா?

"அப்படிச் சொல்ல நான் யார்? பொறுப்பானபதவியிலே இருக்கிறவங்க, அங்கேயிருந்து பறந்துகிட்டு வரவேண்டிய காரணம், என்ன?"

"கா...கா...கா...ரணம், தெரியலியே."

★

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.